விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 08 வியாழக்கிழமை (23.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

ராம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடுவேன்!



## ராகுல் காந்தி அறிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மிக விரைவில் தான் நேரடியாகத் தலையிடவுள்ளதாக இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். நேற்று தமிழகத்துக்கு விஜயம் செய்த ராகுல் காந்தி ஊடக வியலாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளி. தண்ணீர் தாங்கியில் பிரபாகரன் இருந்தாராம்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கிளிநொச்சியில் இருந்த தண்ணீர்த் தாங்கியில் இருந்தவாறு தான் யுத்தத்தை வழிநடத்திக் கொண்டிருந் தார் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித் திருக்கின்றார்.

வன்னி இறுதி (16ஆம் பக்கம் பார்க்க)


## முன்னாள் புலி உறுப்பினர்கள் 160 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் பொதுமக்களுடன் வாழ்ந்து வந்த 160க்கும் மேற்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப் பினர்கள் கொழும்பு நீதிவானால் விளக்கமறி யலில் வைக்கப்பட்டனர்.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களில் பொது மக்களுடன் மறைந்து வாழ்ந்த போது இவர் கள் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந் நிலையில் பொலிஸாரால் மேற்கொள் ளப்பட்ட புலனாய்வுகளின்போது இவர்கள் புலிகளிடம் பயிற்சி பெற்று பல்வேறுகுற்றச் செய ல்களில் ஈடுபட (16ஆம் பக்கம் பார்க்க)



வடக்கில் மீள்குடியேற்றப்பட்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்தின வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு பொருட்கள் அடங்கிய பொதியை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம்: எஸ். கரன்)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10ஆயிரம் பேருக்கு நிவாரணம்

### மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மீள்குடியேற்றப்பட்டு வெள்ளத் தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 4500 ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பத்தாயிரம் பொதிகள் வழங்கப்படும் என மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்தின வீரக்கோன் தெரிவித் துள்ளார்.

வடக்கில் மீள்குடியேற்றப்பட்டு வெள்ளத் தினால் பாதிக் (16ஆம் பக்கம் பார்க்க)



## நாடு முழுவதும் எதிர்ப்பு பேரணி ஐக்கிய தேசியக் கட்சி திட்டம்!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் ஜனவரி மாதம் 26ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டத் தைப் போன்று பல்வேறு எதிர்ப்புப் பேரணிகள் நடத்தப் படும் என்று எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட் சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் ளார். கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேர ணியில் கலந்துகொண்டு (16ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

'எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங் களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே'

சிறை மீண்ட சீமானின் அதிரடித் தொடர் ③

NIBM BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development



ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாயந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

- மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
- வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் (முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன!
முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வடக்கில் மீள்குடியேற்றப்பட்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. நேற்று யாழ்.பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்தின வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் – எஸ்.கரன்)

# ஒட்டகம் என்ன விலை? சொன்னால் வாங்கலாம்!

## பிரதியமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

கால்நடை அபிவிருத்தி அமைச்சு மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள தூதரகங்கள் மூலம் ஒட்டகங்களின் விலைகளை விசாரித்து வருவதாக பிரதியமைச்சர் எச்.ஆர்.மித்ரபால தெரிவித்துள்ளார்.

ஒட்டகப் பாலையும் தீக்கோழி முட்டையையும் பெறுவதற்காக இங்கு ஒட்டகம் மற்றும் தீக்கோழிப் பண்ணைகளை அமைக்கப் போவதாக கால்நடைகள் அபிவிருத்தி பிரதியமைச்சர் எச்.ஆர்.மித்ரபால கடந்த வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சவுதி அரேபியா போன்ற நாடுகளில் ஒட்டகங்களின் விலைகளை விசாரித்து வருவதாக பிரதியமைச்சர் தெரிவித்தார். சவுதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் நானே தொடர்பு கொண்டேன். இவ் ஒட்டகங்களின் விலைகள் மிக அதிகம். எனினும் விபரமான அறிக்கையை விரைவில் நாம் பெறுவோம் என அவர் தெரிவித்தார்.

ஒட்டகப் பண்ணையை இலங்கையில் அமைக்க தீர்மானிக்கப்பட்டமைக்கான காரணம் குறித்து கேட்டபோது எதிர்காலத்தில் அரேபிய நாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பிரயாணிகள் வருவர் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. எனவே அவர்களுக்கு விருப்பமான உணவுகளும் இங்கு கிடைக்க வேண்டும் என பிரதியமைச்சர் பதிலளித்தார். (ச-5)

# 30 வருடமாக பாதிக்கப்பட்ட பகுதியை உடனடியாக அபிவிருத்தி செய்ய முடியாது

## மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

30 வருடமாக அபிவிருத்திகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் பல அழிவுகளை எதிர்கொண்ட பகுதிகளை ஒருவருடத்திற்குள்ளோ அல்லது இரண்டு வருடத்திற்குள்ளோ அபிவிருத்தி செய்ய முடியாது. குறைந்தது பத்து வருடமாவது தேவைப்படும் என மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

வடக்கில் மீள்குடியேற்றப்பட்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் நேற்று யாழ்.பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த வருடம் தைமாதம் அளவில் யாழ்.மாவட்டத்தில் பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பல முயற்சிகளை எடுத்து வருகின்றார்.

தமிழர்கள் அடைந்த துயர் அனைத்தும் நான் அறிவேன். போரினால் பலர் உயிரிழந்துள்ளனர். பலர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். இன்னும் மனநோயாளிகளாக மாறியுள்ளனர். இவர்களுக்கு உளவள ஆரோக்கியம் தேவைப்படுகிறது.

போரினால் பாதிப்புற்று தற்போது மீள் குடியமர்ந்துள்ளவர்கள், இவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதில் எனக்கு தனிக்கடமையுள்ளது.

அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி என்பன தமிழ் மக்களின் முன்னேற்றகரமான வாழ்வுக்கு பங்களிப்பு செய்து வருகிறது.

யாழ்.குடாநாட்டில் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களால் வரும் வருமானம் 400 கோடி ரூபாய். இந் நிதியைக் கொண்டு யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்திகள் முன்னெடுப்பது இலகுவான விடயமே.

தேர்தல் காலத்தில் முரண்படுவதுண்டு. ஆனால் மக்களின் அபிவிருத்தியில் ஒன்றுபட்டே உழைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# உயர்தரத்திற்கு பிரவேசிக்க கணித சித்தி தேவையில்லை

கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தை பயில்வதற்காக கணித பாடத்தில் சித்தியெய்தியிருக்க வேண்டிய அவசியம் இல்லையென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை, இசைத்துறை போன்ற கற்கை நெறிகளை தொடர விரும்பும் மாணவர்களுக்கு தற்போதைய நடைமுறை தடையாக அமைந்துள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

உயர்தரக் கல்வியை தொடர வேண்டுமாயின் சாதாரண தரத்தில் சித்தியடைந்திருக்கவேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் நடைபெற்ற சிறுவர் நாடக விழாவில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மாணவர்கள் கல்வியைத் தொடருவதற்கு இவை செயற்கையான தடையாக அமையப் பெற்றுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)






# சுனாமிப் பேரலையின் 6 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுனாமிப் பேரலையின் 6வது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு துர்க்காபுரம் சிற்பாலய கூடத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பூமி அதிர்வுகள், வெள்ளப்பெருக்கு, காலநிலை மாற்றங்கள் போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பது தொடர்பான விசேட கருத்தரங்கும் சிற்பப் படைப்புக்களின் கண்காட்சியும் இடம் பெறும். (ச-7)

# சத்தியவான் சாவித்திரி இசை நாடகம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்கள் பங்கேற்கும் சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் நாளை பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-7)

# பதவி வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

யா/தோப்புக்காடு மறை ஞான சம்பந்தர் வித்தியாசாலையின் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாக்கிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

தீவக கல்வி வலய அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் தரத்திற்கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விண்ணப்பப் படிவத்தினை வலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி 31.12.2010 ஆகும்.

இப்பாடசாலை ஜனவரிமாதம் மீளத்திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

******************

தீவகக்கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் – தமிழ்மொழி மூலமான பதவி வெற்றிடமாக உள்ளது. இவ்வெற்றிடத்திற்கு தீவகக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 அல்லது 2-I தரத்தினைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தமிழ் பாடத்தினை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி அல்லது தமிழ்ப் பாடத்தில் விசேட பட்டத்தினை பெற்றவராக இருத் தல் வேண்டும். விண்ணப்பதாரி தொடர்ச்சியாகக் குறைந்தது மூன்று வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயது கொண்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்ப முடிபுத்திகதி 31.12.2010 ஆகும். (சு)

# வெங்காயம் இல்லாததால் இறக்குமதியாளர்கள் கண்ணீர்

(கொழும்பு)

இந்தியாவில் வெங்காய விலை உயர்வடைந்துள்ளதால் வெளி நாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதி செய்வதை இந்தியா இடைநிறுத்தியுள்ளது. இதனால் இலங்கைச் சந்தையில் பெரிய வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்மை இனங்காட்ட விரும்பாத முன்னிலை இறக்குமதியாளர் ஒருவர் இதுதொடர்பாக கூறுகையில், ஜனவரி 15 ஆம் திகதி வரை வெங்காய ஏற்றுமதியை இந்தியா இடைநிறுத்தியுள்ளது. இந்த அறிவிப்பின் காரணமாக இலங்கைக்கு கப்பலில் அனுப்பப்படவிருந்த வெங்காய கொள்கலன்களை இந்திய அதிகாரிகள் வாபஸ் பெற்றுள்ளனர். இல்லாவிடின் நாம் ஒரு தொகுதி வெங்காயத்தை இவ்வாரம் இறக்குமதி செய்திருக்க முடியும் எனக் கூறினார்.

அதேவேளை இந்திய அரசாங்கம் வெங்காய விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்காக வெங்காய இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சீனா, பாகிஸ்தான் நாடுகளில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய முடியும். ஆனால் சீனாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கு குறைந்தபட்சம் ஒருமாதகாலம் செல்லும். மறுபுறம் பாகிஸ்தானிலுள்ள விநியோகஸ்தர்களுக்கு தற்போது இலங்கைக்கு வெங்காயம் அனுப்புவதைவிட இந்திய சந்தைகளுக்கு அனுப்புவது இலாபகரமானது. இத்தகைய சில நடைமுறைப் பிரச்சினைகளை நாம் எதிர்கொண்டுள்ளோம் என அவர் மேலும் கூறினார். (ச-5)

# கொக்குவிலில் ஓடு பிரித்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சேச் லேனில் உள்ள வீடொன்றில் ஓட்டை பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளது. வீட்டு உரிமையாளர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் இத்திருட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் பணியாற்றும் து.தனபாலசிங்கம் என்பவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டு நடைபெற்றுள்ளது.

இதுதொடர்பில் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.slic.lk



# வடக்கில்

## புத்தொளியுடன்

### பாதுகாப்பு மற்றும் உபசரிப்பு

சமாதா்ன ஒளிக்கதிர்கள் பரவும் வடக்கில், நம் மக்கள் வாழ்விலும் புத்தொளி வீசிட சுபதருணம் ஒன்று உதயமாகின்றது. காப்புறுதி துறையின் முன்னோடியும், பாரிய காப்புறுதி நிறுவனமுமான ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் ஆனது வடக்கு வாழ் மக்களுக்கு பாதுகாப்பும் உபசரிப்பும் மிக்க சேவையை மனமுவந்து வழங்கிட 2010 மார்கழி 23ம் திகதியன்று சுபவேளையில் தனது யாழ்ப்பாண கிளையினை புதிய கட்டிடமொன்றிற்கு இடம்மாற்றுவதுடன் புதிய கிளையினை கிளிநொச்சியிலும் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றது.



**யாழ்ப்பாணத்தில்**
**இல. 571, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**கிளிநொச்சியில்**
**இல. 31, ஏ9 வீதி, கிளிநொச்சி.**

நாடெங்கிலும் பரவியுள்ள ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸின் ஒருங்கிணைக்கப்பட்ட கிளை வலைப்பின்னலினூடாக உங்களின் அனைத்து காப்புறுதி தேவைகளை பூர்த்தி செய்ய நாம் அர்ப்பணிப்புடன் தயாராகவுள்ளோம்.

AAA RAM RATINGS

AA- Fitch Ratings

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னை அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் வலிகாமம் வடக்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான தென்னங்கன்றுகள் விநியோகம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## மாதர் கிராம சங்கங்களுக்கு சுழற்சி முறைக் கடனுதவி

(கரவெட்டி)

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 19 மாதர் கிராம சங்கங்களுக்கும் நெக் டெப் நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சங்கங்களுக்கும் தலா 5 இலட்சம் ரூபா படி சுழற்சிக் கடன் வழங்கப்படவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைச் சிவன் கோவில் மண்டபத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற கூட்டத்தில் இப் பிரதேசத்தில் உள்ள மாதர் கிராம சங்கங்களை தெரிவு செய்து மாதர் சங்கங்களை பரிசீலித்து ஒவ்வொரு சங்கங்களுக்கும் தலா 5 இலட்சம் ரூபா சுழற்சிமுறைக் கடன் வழங்குவதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான காசோலை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் மாதர் சங்கங்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நெக்டெப் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் எஸ்.எம்.குரூஸ், வட மாகாணக் பணிப்பாளர் ஜெ.ஜெ.சி. பிலிஸ்சன் மற்றும் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3-24)

## தேசிய பாதுகாப்பு தின வைபவம்

(அல்வாய்)

தேசிய பாதுகாப்புத் தினம் -2010 நினைவு கூரும் தேசிய வைபவம் இலங்கை ஜன நாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலும் பிரதம மந்திரி தி.மு.ஜயரட்னவின் பங்களிப்புடனும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர, இடர் முகாமைத்துவப் பிரதியமைச்சர் டுலிப் விஜேசேகர ஆகியோரின் அழைப்பின் பேரில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி,பாரம்பரிய கைத்தொழில்கள மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தியமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரதும் பங்கேற்புடன் எதிர்வரும் 26 ஆம் திகதி மு.ப.9 மணி தொடக்கம் 12.30 மணிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இடர் முகாமைத்துவ அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

அழைக்கப்பட்ட விருந்தினர்கள் வருகை தரமுடியாவிட்டால் 0112695017 என்ற இலக்கத்திற்கு அறியத்தருமாறு இந்நிகழ்வின் செயலாளர் எஸ்.எம்.மொஹமட் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## விஷப்பாம்புக் கடிக்கு இலக்கானவர் வைத்தியசாலையில் அனுமதி

(கரவெட்டி)

தொண்டைமானாற்றுப் பகுதியில் வீடொன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவேளை வயோதிபர் ஒருவரை விஷப் பாம்பு தீண்டியதில் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்றது.

சந்நிதி வீதியில் உள்ள வீடொன்றில் வேலை பார்த்துக்கொண்டிருந்த வீட்டு உரிமையாளர் முத்தன்கந்தன் (வயது 72) என்ற வயோதிபரே இவ்வாறு விஷப் பாம்பு தீண்டியதில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாயில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-3-24)




## சட்டவிரோத கசிப்பு விற்பனையால் சமூகச் சீர்கேடுகள் அதிகரிப்பு

(கரவெட்டி)

வரணி கறுக்காய் பகுதியில் சட்ட விரோத கசிப்பு, மதுபானங்கள் விற்பனை அதிகரித்துள்ளதாக அப்பகுதிமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிகளில் அண்மைக்காலமாக கசிப்பு விற்பனைகள் அதிகரித்துள்ளதனால் அதிகமானோர் கசிப்புக்கு அடிமையாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக 25 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் அதிகமாக இச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

இதனால் அப்பகுதிகளில் சண்டை, களவு,சமூகச் சீரழிவுகள் அதிகமாக இடம்பெற இக் கசிப்பு விற்பனை முக்கியமாக விளங்குகின்றது.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களும் கவலையும் அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வு

(கரவெட்டி)

பருத்தித்துறை பிரதேச பிரிவில் அண்மையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு பருத்தித்துறைப் பிரதேச செயலக மண்டபத்தில் இன்றுகாலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் முக்கிய அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-24)

## யாழ்.மாவட்ட இளைஞர் விருது வழங்கல் விழா-2010

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்திமுடிக்கப்பட்ட இவ்வாண்டுக்கான மாவட்ட இளைஞர் விருது வழங்கல் போட்டியின் இளைஞர் விருது வழங்கல்- 2010 விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் 2 மணிவரை திருமறைக்கலா மன்ற கலைத்தூது மண்டபத்தில் யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்றஇளைஞர் சேவை உத்தியோகத்தர் திருமதி வினோதினி ஸ்ரீ மேனன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் சபை உறுப்பினர் தேவசகாயம் அன்றோ டினேஸ், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வட மாகாணப் பணப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் கலைநிகழ்வுகளும் விருது வழங்கலும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2-9)



யாழ். புதிய உயர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் விரிவுரையாளர், மாணவிகள் கல்லூரி கீதம் இசைப்பதை படத்தில் காணலாம்.

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்.கரப்பந்தாட்ட சங்கத்தினர் இலங்கை மஞ்சி பிஸ்கற் ஸ்தாபனத்தாரின் அனுசரணையுடன் ஆண், பெண் இருபாலாருக்குமான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினை எதிர்வரும் ஜனவரி மாத நடுப் பகுதியில் நடத்தவுள்ளனர்.

இச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பாக இலக்கம் 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற செயலாளரின் முகவரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அதனைப் பூரணப்படுத்தி சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## துறவி

ஒரு அரசனும் அமைச்சரும் ஒருநாள் பேசிக் கொண்டிருந்தார்கள். அரசன் அமைச்சரைப் பார்த்து,

"அமைச்சரே, ஆசையில்லாமல் ஒரு மனிதனால் இருக்க முடியுமா?" என்றார்.

"ஏன் முடியாது? துறவிகளெல்லாம் அப்படிப்பட்டவர்கள் தானே" என்றார் அமைச்சர்.

"அவர்களெல்லாம் உண்மையாகவே ஆசையை விட்டவர்கள் தானா?" என்று கேட்டார் ராஜா.

"அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றார் அமைச்சர்.

"அப்படியானால் ஆசையே இல்லாத ஒரு உண்மையான துறவியை நான் பார்க்க வேண்டுமே" என்றார்.

"அதென்ன பிரமாதம்! அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றார் இவர். சொல்லிவிட்டு உடனே புறப்பட்டு போனார். அங்குமிங்கும் தேடினார். அதற்குப் பின்னர்தான் அவருக்கு "உண்மைத்துறவியைக் கண்டிபிடிப்பது எவ்வளவு கஷ்டமான காரியம்" என்று விளங்கியது.

இருந்தாலும் ராஜாவிடம் உண்மைத் துறவியைக் காட்டுகிறேன் என்று சொல்லியாகி விட்டதே! இப்பொழுது என்ன செய்வது?

ராஜாவிடம் சொல்லியபடி நடக்கவில்லையானால் அவருக்குக் கோபம் வந்து விடுமே! அமைச்சர் யோசித்தார். அவருக்கு ஒருவழி தெரிந்தது. அதுதான் சரியென்று முடிவு செய்தார்.

அந்த ஊரில் அவருக்குத் தெரிந்த நாடக நடிகர் ஒருத்தர் இருந்தார். நன்றாக நடிப்பார். அவரைப் போய்ப்பார்த்தார்.

"இதோ பாரப்பா... எனக்காக நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார்.

"என்ன?" என்று கேட்டார். "நீ ஒரு துறவி மாதிரி சிறிது நேரம் நடிக்க வேண்டும். ராஜா வந்து உன்னைப் பார்த்துவிட்டு போகும் வரைக்கும் நடி. அது போதும். அதற்காக உனக்குப் 10 ஆயிரம் ரூபா தருகிறேன்" என்றார்.

அவர் எந்தக் காலத்தில் இவ்வளவு பணத்தைப் பார்த்திருக்கிறார். அதனால் உடனே சரியென்று ஒத்துக் கொண்டார். அமைச்சர் அரண்மைக்குத் திரும்பி வந்தார்.

"என்ன அமைச்சரே? இன்னுமா ஒரு உண்மையான துறவி கிடைக்கவில்லை" என்றார் ராஜா.

"உண்மையான துறவி ஒருவரை இப்பொழுதுதான் கொஞ்ச நேரத்துக்கு முன் பார்த்துப் பேசிவிட்டு வருகிறேன். அவர் நம்ம ஊருக்கு வெளியே குளக்கரையிலுள்ள ஒரு ஆலமரத்துக்கு அடியில் உட்காந்திருக்கிறார்" என்றார் இவர்.

"அப்படியினால் உடனே புறப்படுங்கள்" என்றார்.

ராஜா பரிவாரங்களுடன் புறப்பட்டார். அங்கே அந்த மரத்தடியில் அந்த ஆள் வேஷம் போட்டுக் கொண்டு துறவி மாதிரி உட்காந்திருக்கிறார்.

ராஜா நேராகப் போய் அந்தத் துறவியின் காலில் விழுந்து வணங்கினார். உடனே ராணியும் அவருடைய காலில் விழுந்தார். அடுத்ததாக அமைச்சர் விழுந்தார்.

அவருக்குத் தெரியும் இது நம்ம ஆள் என்று. இருந்தாலும் என்ன செய்வது? நேரம் அப்படி. பின் பரிவாரங்களெல்லாம் துறவியின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்கள். ராஜா அதன்பின் தங்கத் தட்டில் பொன்னையும் பொருளையும் வைத்து அந்தத் துறவியிடம் மிகவும் பணிவாக நீட்டினார்.

"தாங்கள் தயவு செய்து இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அந்தத் துறவி பற்றில்லாமல் அதைப் பார்த்தார். எல்லாவற்றையும் துறந்துவிட்ட எனக்கு இதெல்லாம் எதற்காக? என்று சொல்லி அதை மறுத்து விட்டார்.

"ஆகா... உண்மையான துறவியைப் பார்த்து விட்டோம்" என்ற ஆனந்தம் அவருக்கு. நிம்மதியாக திருப்தியாக அரண்மனைக்குத் திரும்பி வந்தார். அதன் பின் அமைச்சர் யாருக்கும் தெரியாமல் அந்தத் துறவியிடம் ஓடினார். சொன்னபடி பணத்தை நீட்டினார். "இந்தாப்பா... 10 ஆயிரம் ரூபாய். நான் சொன்னபடி செய்தாய். இந்தா எடுத்துக்கொள்" என்றார்.

அந்த ஆள் ராஜாவிடம் சொன்னது மாதிரியே...

"எல்லாவற்றையும் துறந்துவிட்ட எனக்கு இதெல்லாம் எதற்காக? வேண்டாம்" என்றார்.

"நடித்த வரைக்கும் போதும். இனி நாடக வசனமெல்லாம் வேண்டாம். வேஷத்தைக் கலை" என்றார் அமைச்சர்.

"இல்லை. இது வேஷமில்லை. இது வசனமும் இல்லை. இது உண்மை. கொஞ்சநேரம் துறவி மாதிரி நடித்ததற்கே இந்த தேசத்து ராஜா, ராணி, அமைச்சர், பரிவாரங்கள் எல்லோரும் என் காலில் விழுந்து வணங்குகிறார்கள். அப்படியானால் உண்மைத் துறவியாக இருப்பது எவ்வளவு பெருமையான விடயம்? நான் உண்மையாகவே துறவியாகப் போகிறேன். முடிவு பண்ணிவிட்டேன்" என்றார் அந்த நடிகர். வேஷம் சுட எப்படிப்பட்ட விளைவுகளை உண்டு பண்ணுகிறது பார்த்தீர்களா? நம்ம ஆள் ஒருத்தன் ரொம்ப வசதியாகத்தான் இருந்தான். ஒருநாள் அவனுடைய சொத்து முழுவதும் திருட்டுப் போய்விட்டது. அதன்பின் இவன் துறவி மாதிரி ஆகிவிட்டான். ஊர் ஊராக சுற்றினான். ஒரு குருநாதரைத் தேடிக் கண்டுபிடித்தான். அவரிடம் சீடனாக சேர்ந்து கொண்டான். அவனைப் பார்த்து ஒருத்தர் கேட்டார்.

"நீ உண்மையான சீடன்" தானா என்று.

"இல்லை. சீடன் மாதரி நடிக்கிறேன்" என்றான் இவன்.

"அது குருதுரோகம் இல்லையா?" என்றார் அவர்.

"இல்லை. நான் பண்ணினது குருதுரோகமில்லை. என் குரு பண்ணினது தான் துரோகம். என்னுடைய பணத்தை கொள்ளையடித்தது இவர்தான். அதை எங்கே வைத்திருக்கிறார் என்று கண்டு பிடிப்பதற்குத்தான் இவரிடம் வந்து சேர்ந்திருக்கிறேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கற்பித்தல் அனுபவம் உள்ளவர்களே ஆசிரிய சேவையில் உள்ளீர்க்கப்படுவர்

## கல்வியமைச்சர் தெரிவிப்பு

குறைந்த பட்சம் ஒரு வருட கற்பித்தல் அனுபவம் உள்ளவர்களே ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கற்பித்தல் அனுபவமின்றி எவரையும் ஆசிரியர் சேவைக்கு சேர்த்துக் கொள்வது கிடையாது என்றும் அவர் கூறினார்.

வகுப்பறையினுள் கற்பித்தல் துறையில் ஒருவருட அனுபவம் பெற்றுக் கொள்வது கட்டாயமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்குப் பணிப்புரை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆங்கிலமொழி மூலம் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சையின் போது 8 ஆயிரம் பேர் தோற்றினர்.

இவர்களில் 4 ஆயிரம் பேர் சித்தியடைந்தனர். நேர்முகப் பரீட்சையில் 554 பேர் தெரிவு செய்யப்பட்டனர். 554 பேரில் சிலர் ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கு இயலுமானவர்களாக இல்லை என அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் வகுப்பறையினுள் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்க முடியாத சிலர் தமது நியமனக் கடிதங்களையும் திருப்பிவிட்டதாகவும் இவ்வாறான குறைபாடுகளை நீக்கும் நோக்குடனேயே இப்புதிய நடைமுறை கொண்டு வரப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

# ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

கோப்பாய் கோட்ட கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் உரிய ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (ஶ்ரீ)

# யாழ்ப்பாணத்தில் ஜனவரி 3 ஆம் திகதி சுங்கத் திணைக்கள அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் சுங்கத் திணைக்கள உப அலுவலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இதன் முதல் கட்டமாக யாழ்.நகரில் எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி சுங்கத் திணைக்களத்தின் அலுவலகமொன்று திறந்து வைக்கப்படவுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதாக இந்த சுங்க திணைக்கள உப அலுவலகம் இயங்குமெனவும் இதேவேளை திருகோணமலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் சுங்க திணைக்களத்தின் உப அலுவலகம் திறக்கப் படவுள்ளது. (ஶ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 180 | 170 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 190 |
| தக்காளி | 70 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 100 | 80 |
| கரட் | 80 | 100 | 70 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 100 | 100 | 90 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 190 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 150 |
| பாகற்காய் | 130 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 70 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 200 | 200 | 180 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 90 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 250 | -- | 220 |
| போஞ்சி | 50 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 160 | 140 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50 |

# இராசி பலன்

*23.12.2010*
*(மார்கழி 8, வியாழக்கிழமை)*
*துதியை பிற்பகல் 12.08 மணிவரை*
*புனர்பூசம் பிற்பகல் 3.56 மணிவரை*
*இராகுகாலம் 1.55-3.25 மணிவரை*
*சுபநேரம் 7.55-9.25 மணிவரை*

**மேடம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனைகள் படைக்கும் நாள், உடன் பிறப்புக்கள் சுப செய்திகளைக் கொண்டு வந்து சேர்க்கும் நாள், தொழில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்** குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், இனிய செய்திகள் இல்லம்தேடி வரலாம், வருமானத்தை அதிகரிக்க திட்டம் தீட்டுவீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றியைத் தரும்.

**கடகம்** வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள், பயணத்தால் செலவுகள் அதிகரிக்கலாம், காரியங்கள் கைகூட கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**சிங்கம்** தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும், பயணத்தால் அலைச்சல் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், அமைதிச் குறைவான நாள்.

**கன்னி** பணவரவு இருமடங்காகும், விரதங்களில் நம்பிக்கை கூடும், எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரலாம், உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**துலாம்** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க நண்பர்கள் உறுதுணைபுரிவர், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கி நகரும், பொருளாதார நிலை உயரும்.

**விருச்சிகம்** மாலை நேரம் சுப செய்திகள் வந்து சேரலாம், பெருமையடைய வேண்டிய நாள், வெற்றி வாய்ப்புக்கள் வந்து சேர விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணங்கள் ஏற்படலாம்.

**தனுசு** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு உட்பட வேண்டிய வரலாம், உங்களின் செயற்பாடுகளில் பிறர் குறை சொல்ல நேரிடலாம்.

**மகரம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்வடையும் நாள்.

**கும்பம்** உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், தொழில் முன்னேற்றம் ஏற்படும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கடன் பிரச்சினைகள் சுமுகமாக அமையும்.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், தொழில் வளர்ச்சி ஏற்படும், புதிய திருப்பம் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். வலயக்கல்வி அலுவலக ஒளிவிழா நேற்று யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.கல்வி வலய தமிழ் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் தலைமையுரை நிகழ்த்துவதையும் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட யாழ். மறைமாவட்ட ஆயர் இல்ல நிதி முகாமையாளர் அருட்பணி ஜெ.பி.அன்ரனி மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# கட்சியின் தலைமைத்துவத்தை இளம் தலைவர்களிடம் ஒப்படைக்க தயார்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்களின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படும் கட்சியாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் சஜித், தயாசிறி , ரவி,ருவான் உள்ளிட்ட இளம் தலைவர்களிடம் தலைமைத்துவத்தை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக அந்தக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கருஜயசூரிய, யோசப் மைக்கல் பெரேரா உள்ளிட்ட கட்சியின் சிரேஷ்ட தலைவர்களின் ஒத்துழைப்புடன் இதனை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

களனியில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, நாளுக்குநாள் பொருட்களின் விலைகள் அதிகரித்துவருவதுடன் மக்கள் துனபங்களை அனுபவித்து வருகின்றனர். தேங்காய் ஒன்றின் விலை 60 ரூபா. இந்த நிலையில் தற்போது அரசாங்கம் கேரளாவில் இருந்து தேங்காய் இறக்குமதி செய்கிறது.

கேரளத்தில் மலையாள மாந்திரீகத்திற்காக பயன்படுத்தும் தேங்காய்களை தான் அரசாங்கம் மக்களுக்கு உண்ணக்கொடுக்க முயற்சிக்கின்றது.

பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியாத அரசாங்கம் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தையாவது அதிகரிக்கவேண்டும். யுத்தம் நடைபெற்ற போது மக்களை வயிற்றில் ஈரத்துணியைக் கட்டிக்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். மக்கள் அந்த அர்ப்பணிப்பை செய்தனர். தற்போது யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கழிந்துள்ளன.

2009 ஆம்ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரசார மேடைகளில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ தன்னால் 10 ஆயிரத்து 500 ரூபா ஊதிய அதிகரிப்பை வழங்க முடியாது எனவும் 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்தார். 2ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவதாகக் கூறிய பின்னர் எவ்வாறு 2010 ஆண்டில் பணம் இல்லாமல் போனது எனக்கேட்க விரும்புகிறேன்.



இந்தநிலையில் தற்போது 500 ரூபா ஊதிய அதிகரிப்பை வழங்குவதாக அரசாங்கம் கூறுகிறது. ஏன் ஜனாதிபதி மக்களுக்கு பொய் கூறினார். ஜனாதிபதி பொய்யராக மாறுவதை நான் விரும்பவில்லை. காரணம் பொய்யர் என்பவர் பாவி. பாவி ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக இருப்பதற்கு இடமளிப்பது சரியல்ல எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

## கண்டாவளை பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கான நடமாடும் சேவை

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பிறப்பு, இறப்பு, திருமணசான்றிதழ்களைப் பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளதென கண்டாவளைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

குறித்த மூன்று தினங்களிலும் பின் வரும் சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை கலந்து பயன் பெறுமாறு கேட்டுள்ளார்.

இதில் முதலாம் நாள் நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இதில் ஊரியான், முரசுமேட்டை, கண்டாவளை, கோரங்கள் கட்டு கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை புன்னை நீராவி அ.த.க பாடசாலையில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் பிரமன்தனாறு புன்னை நீராவி கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்களையும் எதிர் வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தர்மபுரம் நெசவு மண்டபத்தில் நடைபெறும் நடமாடும் சேவையில் பெரியபுரம் புளியம் பொக்கனை, கல்மடு நகர், தர்மபுரம் கிழக்கு, தர்மபுரம் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்களையும் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-246)

## பொதுக் கூட்டம்

(காரைநகர்)

காரைமத்தி மேம்பாட்டுக் கழகத்தின் 5 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் ந.கிருஷ்ணபவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் இரா.லோகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கூட்டுறவு திணைக்களத்தின் கூட்டுறவுப் பரிசோதகர் வை.கைலைநாதன் , காரை மத்தி கிராம அலுவலர் இ.திருப்புகழூர்சிங்கம்,காரை மத்தி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.தேவமலர், காரைநகர் பிரதேச கடற்றொழிற் சங்கங்களின் சமாசத் தலைவர் க.இராசச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-246)

## ஐ.நா.வின் சிறுவர் உரிமை செயற்குழுவிற்கு இலங்கையர் தெரிவு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமை செயற்குழுவிற்கு இலங்கையைச் சேர்ந்த டாக்டர் ஹிராந்தி விஜியமன்னே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



20 பேர் போட்டியிட்ட 9 பேரை கொண்ட செயற்குழுவிற்கான தேர்தலில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)




எச்.என்.பி.அஷ்யூரன்ஸின் அனுசரணையுடன் ஜே/80 பெரியகடை மாதர் சங்கப்பணிமனையூடாக 30 அங்கத்தவர்களது பிள்ளைக்கு அண்மையில் சேமிப்பு உண்டியல் வழங்கப்பட்டது. இதில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சேமிப்புச் செய்த பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சங்கத்தலைவி திருமதி சசிரேகா வரதராஜன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழ்ங்குவதையும் எச்.என்.பி.அஷ்யூரன்ஸின் விசேட காப்புறுதி உத்தியோகத்தர் என்.பிரதிப், காப்புறுதி ஆலோசகர் என்.குகன் ஆகியோர் நிற்பதையும் யாழ். பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாலினி [illegible] அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.


## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
### மானிப்பாய்
### கூறுவிலை கோரல்

எமது வலிகாமம் கொத்தணியினால் நவாலியில் நடாத்தப்படுகின்ற பனம் சாராய வடிசாலையில் வடிசாலைப் பொறித் தொகுதிகள் அதனோடு இணைந்த இயந்திர உபகரணங்கள் என்பனவும் அதனோடு இணைந்த இணைப்புக்களும் திருத்தம் சேவிஸ் செய்வதற்கும், மாற்றவேண்டிய பொருட்கள் மாற்றுவதற்கும், மாபிள் பெட்டி புனரமைப்பதற்கும் கூறுவிலை கோரப்படுகின்றது.

வடிசாலைப் பொறித் தொகுதி புதிதாக அமைத்தமை அல்லது திருத்தம் சேவிஸ் செய்தமைக்கான உறுதிப்படுத்தல் கடிதம் சமர்ப்பிக்கும் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மட்டும் கூறுவிலை சமர்ப்பிக்கலாம். கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் இதனைப் பார்வையிட்டு வேலை செய்ய வேண்டிய விபரங்களை எமது காரியாலயத்தில் பெற்று வேலைக்கான கூறுவிலையையும் குறிப்பிட்டு எதிர்வரும் 14.01.2011 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் தலைவர், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(வேலைக்கான உத்தரவாதம் 1 வருடம் இருத்தல் வேண்டும்)

பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.

(சி-1879)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்



2



கவிப்பேரரசு வைரமுத்து

அது வேறு உலகம். பூமிப் பரப்பில் இன்னொரு கிரகம். மேகங்களால் நிராகரிக்கப்பட்டு இயற்கையால் சபிக்கப்பட்டு கடக்கும் போது தேவதைகள் கண்மூடிக் கொள்ளும் வறண்ட நிலம்.

கருவேலமரம், பொத்தக்கள்ளி, கிலுவை, கற்றாழை, சப்பாத்திக்கள்ளி, இலந்தை, நெருஞ்சி, சில்லி, பிரண்டை, இண்டஞ்செடி, சூரான்கொடி முதலான வானத்துக்குக் கோரிக்கை வைக்காத தாவரங்களும்-நரி, ஒணான், அரணை, ஒந்தி, பூரான், பாம்பு முதலான விலங்கினங்களும்-கழுகு, பருந்து, காடை, கௌதாரி, சிட்டு, உள்ளான், வல்லூறு முதலிய பறவை இனங்களும் மற்றும் மனிதர்களும் வாழும் மண் மண்டலம்.

கரும்பாறையிலும்-சரளையிலும்-சுக்கான் கல்லிலும் முள்மண்டிய நிலங்களிலும் தொலைந்துபோன வாழ்வை மீட்டெடுக்கும் போராட்டம்தான் அவர்களின் "பொழப்பு."

கண்ணுக்கெட்டிய தூரம்வரை கானல் அலைகள் கதகதவென்றுகாய்ந்து கொண்டிருந்த அந்த முன்கோடை மாதத்தில் வெயிலை நிலா வெளிச்சமாய்க் கருதி உழுது கொண்டிருந்தார்கள் இரண்டு ஏர்க்காரர்கள்.

முன்னேர்க்காரர் பேயத்தேவர்; தாத்தா. பின்னேர்க்காரன் மொக்கராசு; பேரன். பேயத்தேவர் நல்ல உயரம். முண்டாசையும் சேர்த்தால் ஆறடி சொச்சம். வேர்வையைப் போலவே வயதையும் வழித்தெறிந்துவிட்ட உடம்பு.

மீசைபோல் புருவக்கட்டு. கம்பளி கத்திரித்த மாதிரி மீசைக்கட்டு. நெற்றி மேட்டிருந்து பள்ளம் பறித்து ஆழத்தில் மின்னும் பிரகாசமானகண்கள். நிலம் கிழிக்கும் கலப்பை இருபுறமும் குங்குமம் கொட்டுமே- அதுதான் கலப்பை பிடித்த அவருக்குக்களைப்பு நீக்கும் மருந்து.

சில நேரங்களில் அவர் தனக்குத்தானே பேசிக்கொள்வது மாடுகளோடு பேசுவதுபோலவும், மாடுகளோடு பேசுவது தனக்குத்தானே பேசிக் கொள்வது போலவும் தோற்றமாற்றம் நேரும். அவரோடு பழகிஅந்த 'ஞானம்' பெற்றா லொழிய அதைப் புரிந்து கொள்வது கடினம்.

"ஏலே மொக்கராசு... அழுத்திப் புடிடா மேழிய. உழுது வாடான்னா... குண்டக்கா மண்டக்காக் கோடு போடுறவன்..."

மொக்கராசு பாவம்; சிறுவன். அரைஞாண் கயிற்றின் ஆதரவில் அவிழாதிருக்கும் கால்சட்டை; தலையில் உருமால்-தார்க்குச்சிக்குத் தலைப்பாகை கட்டிய மாதிரி. மாசி வந்தால் பதின்மூன்று முடியும். கையும் காலும் இன்னும் 'ஆம்பளை'யாய்த் திரளவில்லை. ஆள்தாக்குப் பத்தாது. முடிந்தமட்டும் மேழியழித்தினான்.

வாய்க்கூடு போடாத முன்னேர் மாடு ஆங்காங்கே முளைத்திருந்த செடி கடித்தது. திடீரென்று கலப்பை நொண்டியடிப்பது கண்ட பேயத்தேவர், "ஏ நொள்ள... அங்க என்ன ராவுறவ" என்று கடிந்து மாட்டின் மீது தார்க்குச்சி பாய்ச்சினார்.

அதிர்ச்சியில் அது ஒரு சுண்டு சுண்டியதில் தன் கட்டுப்பாட்டிலிருந்து நழுவும் கலப்பையை நேர்செய்ய முயன்று தடுமாறியதில் ஏதோ ஒன்று முட்டியது பேயத்தேவர் காலில். அந்த வலியின் தகவல் மூளைக்குப் போய்ச் சேர்வதற்குள் அலைந்த கலப்பையை சாலில் சரிசெய்த பேயத்தேவர் இடது கால் கட்டைவிரல் நகம் பெயர்ந்து ரத்தம் கொட்டுவது கண்டு உதறினார் காலை.

செம்மண்ணில் சிதறி உதிர்ந்தது சில சொட்டு ரத்தம். இடறியது கல்லா? உழவு காட்டுச் சோளத் தூரா? உழவை நிறுத்தவில்லை பெருசு.

மதியக் கஞ்சிக்கு ஏர் நிறுத்துவதற்குள் 'அஞ்சு குறுக்கம்' உழுது முடித்து ஆறாம் குறுக்கம் சேர்வதுதான் பேயத்தேவரின் தொலைநோக்குத் திட்டம். அதனால் ரத்தத்தை லட்சியம் செய்யாமல் முன்னேறிக் கொண்டேயிருந்தார்-முன்னேரில்.

தாத்தா தன்காலை உதறி உதறி ஏரோட்டும் போதுதான் மொக்கராசு கவனித்தான் ரத்தத்தை. "தாத்தா ரத்தம்..."-ஏரை நிறுத்தாமல் பதறினான்.

எப்போதுமே ஞாபகப்படுத்தினால்தான் காயம் வலிக்கும். ஏர் நிறுத்தாமல் கவனித்தார் தாத்தா; ரத்தம் நிற்கவில்லை. ஏரை நிறுத்தினார். மேழியைப் பிடித்துக்கொண்டே காயப்பட்ட காலை உச்சபட்சம் உயர்த்திக் கண்களுக்கருகே கொண்டு வந்தார். பிய்ந்த நகத்தின் பெரிய துண்டு ஒன்று தொங்கியது; சதையின் கடைசி இழையில் ஊசலாடியது.

"கழுத... முழிக்கிற முழியப்பாரு"என்று தன் காயத்தைக் கண்டித்துக் கொண்டே, தொங்குநகம் பிய்த்துத் தூர எறிந்தார். குனிந்து உழவுமண் அள்ளினார்; உள்ளங்கையில் தெள்ளினார். பேய்பிடித்த பெண்ணுக்குப் பூசாரி விபூதி அடிப்பது மாதிரி காயத்தில் மண் அடித்தார்.

"என்ன தாத்தா... புண்ல மண் அடிக்கிறிக...?" என்றான் மொக்கராசு பாசத்தில் பதறி.

"மண்ணுதான் சாப்பாடு... மண்ணுதான் மருந்து நம்மளுக்கு..." என்றவர், தன்னால் நேர்ந்த தாமதத்தைச் சகிக்க முடியாமல்- "ஓட்றா மொக்க ஒட்டு... உச்சிப் பொழுதாச்சு..." என்று பதறினார் தட்டான்தூர்களை நோங்கிய மாடுகளைத் தடுத்தாட் கொண்டபடி. மாடுகளின் நிழல்வைத்தே நேரஞ் சொல்லும் பேயத்தேவர் மதியக் கஞ்சிக்குள் இந் தக் குறுக்கம் உழுது தீருமா என்று சந்தேகப் பட்டார்.

"அழுத்துறா மொக்க... அழுத்துறா...

தை ஒழவு அய்யாட்டுக் கெ(ன)டடா..."

விளங்கவில்லை மெக்கராசுக்கு; மவுனம் பேசினான். மவுனம் சம்மதம் என்பதெல்லாம் ஏடு போட்டவர்கள் செய்த இலக்கணம். தாத்தாவுக்கும் பேரனுக்கும் மத்தியில் மவுனம் என்பது கேள்வி. பழமொழி சொன்னவரே பதிலும் சொன்னார்:

"சொன்ன 'சொலவம்' புடிபடலையா மொக்க...? ஆயிரம் ஓரம்போடு... ஆட்டுக்கெட மாதிரி ஆகுமா நெலத்துக்கு...? ஆட்டுப் புழுக்கையும் கோமியமும் சேந்தா பொட்டக்காடு பொன் வெளையுமிடா. அப்படி அஞ்சு ஆட்டுக்கெட வச்சா என்ன ஊட்டமோ அப்படி ஒரு ஊட்டமடா தைமாச ஒழவு. சும்மாவா சொன்னாங்க கெழவங்க...? பேயத்தேவர் நரைத்த மீசை தடவிக்கொண்டு வாலிபனாய்த் தன்னை வரித்துக்கொண்டார்.

"தை ஒழவு அய்யாட்டுக் கெட... தை ஒழவு அய்யாட்டுக் கெட..."-முணுமுணுத்து முணுமுணுத்துப் பழமொழியைப் பாடம் செய்தான் மொக்கராசு.

மாட்டுநிழல் காலடிக்குள் அடங்கும் வரையில் ஏர் நிறுத்தவில்லை பெருசு. அஞ்சுகுறுக்கம் உழுது முடித்து ஆறாம் குறுக்கத்தில் ஏர்க்கலப்பை இறங்கிய பிறகுதான், "ஹோ ஹோ ஹோ" என்று மாட்டையமர்த்தினார். மதியக்கஞ்சி குடிக்க நிழல்தேடினார்கள் பொத்தக்கள்ளியின் தாழ்வாரத்தில். பொத்தக்கள்ளிப் புதரோரம் குண்டும் குழியுமாயிருந்த கல்லில் ஒரு மாதிரி ஒருக்களித்து உட்கார்ந்தார் தாத்தா. அவர் வேட்டிகட்டும் தொழில்நுட்பம் மட்டும் இதுவரை விளங்கியதில்லை மொக்கராசுக்கு.

எப்போதும் கோவணம் கட்டி அறியாத தாத்தா கோவணத்தின் தேவை தீருமாறும் அதே நேரத்தில் வேட்டிக்கொரு வில்லங்கம் நேராமலும் வேட்டியைத் திரட்டி உருட்டி தன் பாரத்தையெல்லாம் இடத்தொடையில் இறக்கி உட்காருவார். ஆனால் ஒருநாளும் அவரது 'அந்தரங்க சுத்தி'யை மட்டும் வேட்டி காட்டிக்கொடுத்ததில்லை.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை சேகர முகாமைக்குரு அருட்திரு த. அருள்நாதன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் அ.சா. அரியகுமார், ஆசிரியர் ந.சிவலிங்கம் ஆகியோர் நிற்பதையும் பருத்தித்துறை கத்தோலிக்க அருட்சகோதரன் சுரேந்திரகுமார் உரையாற்றுவதனையும் பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அல்வாய் செய்தியாளர்)

## வருடாந்த பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வல்வை ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 26 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வல்வை தென்மேற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் வல்வை ஒன்றியத் தலைவர் சூ.சே.குலநாயகம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படவுள்ளது.

(ஸ்ரீ-2-9)

## அரைகுறை ஆடைகளுக்கு தடை விதிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

உள்ளூர் கலாசாரத்துக்கு தீங்கானவை எனக் கருதப்படும் ஆடை வகைகளுக்கு தடைவிதிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இது தொடர்பான விதிமுறைகளை வகுக்க ஒரு விடேச குழு நியமிக்கப்பட்டுள்ளதாக கலாசார விவகார டி.பி.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்தாண்டு முதல் இந்தத் திட்டம் அமுலுக்கு வரும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்தின் இந்த முயற்சி தான் இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த நகைச்சுவையாக இருக்கும் என்று நவநாகரிக ஆடைத் தொழிற்துறையைச் சேர்ந்த ஒருவர் விமர்சித்துள்ளார்.

அரை நிர்வாணம் எது என்பதற்கு அரசு முதலில் விளக்கமளிக்கவேண்டும். இதை எந்த அளவுகோல் கொண்டு நிர்ணயம் செய்யப் போகின்றார்கள் என்பதையும் அவர்கள் முதலில் விளக்கவேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுரஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிபூசை முடிவுற்றதும் "கிருஷ்ண வழிபாடு" என்னும் விடயம் பற்றி மதுரகவி எம்.பி அருளானந்தம் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஸ்ரீ-3-35)

## முருக நாம பஜனை

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் முருகன் அடியார்களால் "முருக நாம பஜனை" நிகழ்த்தப்படவுள்ளது. (ஸ்ரீ-3-35)

# உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் பி.எச்.டி பட்டம் வழங்கும் திட்டம்

## அடுத்த வருடம் முதல் அமுல்

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பிக்கும் அதிகாரிகளில் 60 சதவீமானோர் பி.எச்.டி.(கலாநிதி) தகைமையை கொண்டிருக்கவில்லை என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பட்டப்பின் படிப்பு கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்கு, கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்களிலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலும் இந் நிலைமை மோசமாக இருப்பதாகவும், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பட்டப்பின் படிப்பு தகைமைபெற்ற பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

கலை, மனிதவியல், முகாமைத்துவம் போன்ற துறைகளைச் சார்ந்த பல்கலைக்கழக ஆசிரிர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கற்பதற்கு குறைந்த நிதிவளத்தையே கொண்டிருக்கின்றனர்.

எனவே, ஒரு வருட ஆய்வுகளை மாத்திரம் வெளிநாட்டு பல்கலைக்கழகங் களில் மேற்கொள்வோருக்கு உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பி.எச்.டி. பட்டத்தை வழங்கக் கோருவது சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டம் அடுத்த வருடம் முதல் அமுல்படுத்தப்படும் எனக் கூறிய அமைச் சர் இதை வெற்றிகரமாக்குவதற்கு பல்கலைக்கழகங்களின் சிரேஷ்ட அதிகாரிகளின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## சனசமூக நிலையங்களுக்கான மூலதன நன்கொடை

(யாழ்ப்பாணம்)

2010 ஆம் ஆண்டுக்கான சனசமூக நிலைய மூலதன நன்கொடை வலி தெற்கு பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இதற்கான விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்றுபூரணப்படுத்தி சமர்ப்பித்து தங்களுக்குரிய நன்கொடையை உடன் பெற்றுக்கொள்ளுமாறு வலி தெற்கு பிரிவு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா கேட்டுள்ளார். (ஸ்ரீ-9)

## கவிதை நூல் வெளியீட்டு விழா

(சாவகச்சேரி)

புஸ்பநாதன் நிசாந் எழுதிய "பனிவிழும் இரவுகள்" கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் திருப்புகழ் மண்டபத்தில் சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பேராசிரியர் பி.வேல்நம்பி கலந்துகொள்ளவுள்ளார்.

இந் நூல் வெளியீட்டுரையினை அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் தலைவர் கவிஞர் பொன்.சுகந்தன் நிகழ்த்த மதிப்பீட்டு உரையினை சைவப் புலவர் கா.கமலநாதன் ஆற்றுவார். (ஸ்ரீ-4-29)

# வலுவான ஓர் அரசாங்கம் கருத்து சுதந்திரத்திற்கு அஞ்ச வேண்டியதில்லை

## கனேடிய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வலுவான ஓர் அரசாங்கம் கருத்து சுதந்திரத்திற்கு அஞ்சவேண்டியதில்லை என கனேடிய தூதுவர் புரூஸ் லெவி தெரிவித்துள்ளார்.

யுத்தம் ஏற்படுவதற்கு ஏதுவாக இருந்த காரணிகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் காட்டிவரும் அக்கறை வரவேற்கத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பவ்ரல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, இலங்கை அரசாங்கம், சிறுபான்மை கட்சித்தலைவர் ஆகியோரின் நடவடிக்கைகள் குறித்து கனேடிய மக்கள் திருப்தியடைந்து வருவதாகவும் பல்வேறு துயரங்களை எதிர்நோக்கிய மக்களின் பிரச்சினைகளுக்கு வெறுமனே பொருளாதார அபிவிருத்தியின் மூலம் மட்டும் தீர்வு வழங்கமுடியாது எனவும், அவ்வாறான முனைப்புகளை அரசாங்கம் மேற்கொண்டால் அது தோல்வியடையலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மரபு ரீதியாக ஜனநாயக விழுமியங்களைக் கட்டிக்காப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சுதந்திரமாக ஒன்றுகூடி கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையான வலுவான அரசாங்கமொன்று மக்களின் கருத்து சுதந்திரத்தைக் கண்டு அஞ்சாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டால் அவற்றை மீளவும் நிலைநாட்டுவது சவால் மிக்கதென்பது கடந்த கால வரலாறுகளின் மூலம் தெரிந்து கொள்ளமுடியும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் காரணமாக சொத்துக்களை இழந்த 685 பேருக்கு நட்ட ஈடு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் வீடுகளையும் சொத்துக்களையும் இழந்தவர்களில 685 பொதுமக்களுக்கு புனர்வாழ்வு அதிகார சபையினால் நட்ட ஈடுகள் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி,முல்லைத்தீவு மற்றும் நெடுங்கேணியைச் சேர்ந்த இந்தப் பொதுமக்களுக்கான காசேலைகள் நாளை வெள்ளிக்கிழமை வைப வரீதியாக வழங்கப்படவுள்ளன.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 500 பேருக்கு இரண்டாம் கட்ட கொடுப்பனவு காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் முல்லைத்தீவைச் சேர்ந்த 110 பேர் மற்றும் நெடுங்கேணியைச் சேர்ந்த 85 பேருக்குமான முதல் கட்ட நட்டஈடு கொடுப்பனவு நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் மாலை 3 மணிக்கும் வழங்கப்படும் என புனர்வாழ்வு அதிகார சபையின் வட மாகாண மாவட்ட முகாமையாளர் சி.கனகசபாதி தெரிவித்துள்ளார்.

இந்த வைபவங்களில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, மனிதவள அமைச்சர் டி.யூ.குணசேகர, புனர் வாழ்வு அதிர சபையின் தலைவர் ஈ.ஏ.சமரசிங்க உள்ளிட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நட்ட ஈடுகள் வழங்கப்படுவதினை துரிதப்படுத்தும் நோக்குடன் புனர்வாழ்வு அதிகார சபையின் மாவட்ட அலுவலகம் ஏற்கனவே வவுனியா செயலக வளவினுள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# நல்லிணக்க ஆணைக்குழுவில் சாட்சியளிக்க ரணிலுக்கு அழைப்பு?

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உத்தியோகப் பற்றற்ற ரீதியில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் செயாளரினால் தொலைபேசி மூலம் ரணில் விக்ரமசிங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகப்பூர்வமாக அழைப்பு விடுக்குமாறு ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பது குறித்து தீவிர கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக ரணில்தெரிவித்துள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுத்த நிறுத்த உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற முறு கல் நிலைமைகள் மற்றும் அதற்கான காரணிகள் குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# காதலர்களை அச்சுறுத்தி கப்பம் கோரிய பொலிஸார் கைது

(கொழும்பு)

காதலர்களை அச்சுறுத்தி கப்பம் பெற்று வந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளை கைது செய்துள்ளதாக புத்தளம் ஹலாவத்தைப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஹலாவத்தைக் கடற்கரையில் காற்று வாங்கிக் கொண்டிருந்த காதலர்களை அச்சுறுத்தி குறித்த இரு பொலிஸ் அதிகாரிகளும் 2ஆயிரம் ரூபாய் கப்பம் கோரியுள்ளனர்.

அச் சமயம் அவர்களிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை. பின்னர் காதலர்களிடம் பேரம் பேசி 500 ரூபா வரை குறைத்துக் கேட்டுள்ளனர்.

அவ்வேளை இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் மது போதையில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இதையடுத்து அவ்விரு பொலிஸ் அதிகாரிகளும் ஹலாவத்தைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப அனைத்து இனங்களுக்கும் சமமான உரிமை

## அமைச்சர் திஸ்ஸ விதாரண வலியுறுத்து

(கொழும்பு)

ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப புதிய அரசியலமைப்பும் அரசியல் தீர்வும் அத்தியாவசியம் என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இது தொடர்பான உடனடியாக பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இதுவரை பேச்சுவார்த்தைகள் எதுவும் நடைபெறாமையானது கவலைக்குரிய விடயம் என்றும் ஒரு இலங்கை தேசத்தை கட்டியெழுப்ப வேண்டுமாயின் அனைத்து இனங்களுக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நம்பிக்கை எனவும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நாடும் நடப்பும்

## நான்

நான் நான் தான்
நானென்றால் நான் தான்
முடித்தவனும் நான் தான்
முடி வைத்தவனும் நான் தான்
குடியிடை குண்ட........
குடி குடியாய் ..........ஐயோ!
தொலைத்தவனும் நான் தான்
தொல்லை கொடுப்பவனும் நான் தான்
'நான்' ஐ அழிக்க யாரென்ன செய்வது
விளக்கணைய அதுவிடும் சுடர் பெரிது

- அறியாதவன்

# 2010.12 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1783 - ஜோர்ஜ் வோஷிங்டன் இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகினார்.

★ 1914 - முதலாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்துப் படைகள் கெய்ரோவில் தரையிறங்கின.

★ 1916 - முதலாம் உலகப் போர்: எகிப்தின் சினாய்க் குடாவில் கூட்டுப்படைகள் துருக்கியப் படைகளுடன் இடம்பெற்ற சமரில் வெற்றி பெற்றனர்.

★ 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய இராணுவம் வேக் தீவைக் கைப்பற்றியது.

★ 1947 - முதலாவது டிரான்சிஸ்டர் பெல் ஆய்வுகூடத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

★ 1948 - பிரதமர் டோஜோ உட்பட ஏழு ஜப்பானியப் போர்க் குற்றவாளிகளுக்கு டோக்கியோவின் சுகோமோ சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

★ 1954 - முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

★ 1958 - டோக்கியோ கோபுரம், உலகின் மிகப் பெரிய இரும்பினாலான கோபுரம் திறக்கப்பட்டது.

★ 1972 - தென்னமெரிக்காவில் ஆண்டீஸ் மலைத்தொடரில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிர் தப்பிய 16 பேர் 73 நாட்களுக்குப் பின்னர் காப்பாற்றப்பட்டனர்.

★ 1979 - சோவியத் படையினர் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலைக் கைப்பற்றினர்.

★ 1986 - எங்கும் தரையிறங்காமல் முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த வொயேஜர் விமானம், டிக் ரூட்டன், ஜீனா யேகர் ஆகிய விமானிகளுடன் கலிபோர்னியாவில் தரையிறங்கியது.

★ 1990 - 88% சிலொவேனிய மக்கள் யூகொஸ்லாவியாவில் இருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

★ 2004 - தெற்குப் பெருங்கடலில் உள்ள மக்குவாரி தீவில் 8.1 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 2005 - அசர்பைஜான் விமானம் புறப்பட்டு சில நிமிடங்களில் பக்கூ நகரில் வீழ்ந்து நொருங்கியதில் 23 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2005 - சாட் சூடானுடன் போரை அறிவித்தது.

### பிறப்புகள்

★ 1807 - அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய றோமன் கத்தோலிக்க மறைப் போதகர் (இ.1870)

★ 1902 - சரண் சிங், இந்தியக் குடியரசின் 7ஆவது பிரதமர் (இ.1987)

★ 1956 - பொன்னம்மான் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் (இ.1987)

### இறப்புகள்

★ 1907 - பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியலாளர் (பி.1824)

★ 1972 - அந்திரே தூப்பொலியெவ், சோவியத் விமான வடிவமைப்பாளர் (பி.1888)

★ 2004 - பி.வி.நரசிம்மராவ்,ஒன்பதாவது இந்தியப் பிரதமர் (பி.1921)

**1972 - நிக்கராகுவா நாட்டின் தலைநகர் மனாகுவாவில் இடம் பெற்ற நிலநடுக்கத்தில் 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை போரின் விளிம்பில் நிற்கின்றது மே 2006 இல் அமெரிக்கா அறிவித்தது

**சமாதான முயற்சிகள் தொடர்பான அமெரிக்காவின் இரகசிய ஆவணங்கள் தொடர்பில் நோர்வே நாளிதழ் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது. (ஆ-ர்)**

இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகளில் நோர்வே உரிய அக்கறையுடன் செயற்பட்டதை யிட்டு அமெரிக்கா புகழாரம் சூட்டியதாக வீக்கிலீக்ஸ் ஆவணங்களிலிருந்து தெரியவந்



துள்ளது.

2002ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கையுடன் சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்ட போது,நம்பிக்கை தரக்கூடிய வகையில் அனைத்தும் நன்றாக அமைந்ததாகவும்,2006ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இரண்டு தரப்பும் போரைத்தெரிவு செய்யும் வரை சமாதான அனுசரணையாளர்களாக நோர்வே கடும் சவால்களை எதிர் கொண்டதாகவும் இவ் ஆவணங் களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்கிலீக்ஸ் ஆவணங்களை முன்வைத்து நோர்வேயின் முன் னணி நாளிதழான ஆத்தன் ஆப்ஸ்தன் போஸ்தன் கட்டுரை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அதன் தமிழ் ஆக்கத்தினை முழுமையாக இங்கு தருகின் றோம்.



2002 யூலை 27ஆம் திகதி லண்டனில் உள்ள நோர்வே தூதரகத்தில் நோர்வேயின் சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், வெளிவிவகார பிரதி அமைச்சர் வீதார் ஹெல்கசன் மற்றும் பல நோர்வே இராஜதந்திரிகள் அமர்ந்திருக்கின்ற னர். ஸ்ரீலங்கா அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் விடு தலைப்புலிகளின் பிரதிநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப் பிற்கான சாட்சிகளாக இவர்கள் அங்கிருந்தனர்.

மிலிந்த மொறகொட எதிர் பார்த்ததைவிட அங்கு நிலவிய சூழல் சுமுகமாக இருந்தது. இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக தனிநாட்டுக்கோரிக்கையை அன்ரன் பாலசிங்கம் முன் வைப்பார் என்ற அச்சம் மொற கொடவிற்கு இருந்தது.ஆனால் தமிழர் பிரதேசங்களுக்கான சுயாட்சி பற்றி அன்ரன் பாலசிங்கம் பேசினார்.

சமாதான முயற்சிகள் சரியான பாதையில் நகர்கின்றது என்ற நம்பிக்கையுடன் மொறகொட கொழும்பு திரும்பினார். ஆனால் அவரின் எண்ணம் பிழைத்து விட்டது.

## நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் பிரபாகரனுக்கு சீற்றத்துடன் எழுதிய கடிதம்!

நோர்வே தலைமையிலான சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பான அமெரிக்காவின் பல



நூறு இரகசிய விக்கிலீக்ஸ் ஆவணங்களை "ஆப்தன் போஸ்தன்" வெளியிட்டுள்ளது. இவ் ஆவணங்கள் மூலம் சமாதான முன்னெடுப்புக்கள் எவ்வாறு தோல்வி கண்டன என்பதை அறிய முடிகின்றது. நோர்வே தரப்பு இராஜதந்திரிகள் எவ்வாறு விரக்தியுடன் செயற்பட்டனர் என்பதையும் இவ் ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இருந்த போதும் நோர்வே இராஜதந்திரிகள் அமெரிக்காவில் முழுமையான நம்பிக்கையை பெற்றிருந்தனர்.நோர்வேயின் சமாதானப்பணிகளையிட்டு அமெரிக்கா முழுமையான திருப்தி கொண்டிருந்ததோடு,நோர்வேயின் பணி முன்னெடுப்புகளுக்கு தேவை யாக இருந்த 'அரசியல் செயற் தளத்தினையும்' வழங்கி இருந்தது.

சமாதானப்பேச்சுவார்த்தைகளின் உச்ச நகர்வாக 2002 டிசம்பர் ஒஸ்லோவில் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடு அமைந்தது. அதில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர் களும் சிங்களவர்களும் ஒன்றாய் வாழத்தக்க ஓர் அரசியல் தீர்வினை எட்டுவது தொடர்பான இணக்கப் பாடு இரு தரப்பிற்கிடையிலும் எட்டப்பட்டது. அதன் பின்னர் எல்லாமே பின் நோக்கி நகர்ந்தன.

ஒளிவுமறைவு நிறைந்த, தடு மாற்றம் கொண்ட தரப்பாக புலி கள் காணப்பட்டனர். 'அவர்கள் தமது நிலைப்பாட்டினை வலியுறுத் தினர். விட்டுக்கொடுப்பற்ற வர்களாக தெரிந்தார்கள்' என ஸ்ரீலங்காவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வோஷிங்டனுக்கு அனுப்பிய குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு புலிகள் சமாதானப் பேச்சுகளில் இருந்து விலகுகின்றனர். நோர்வேக்கும் அமெரிக்காவிற்கும் புலிகளின் விலகலுக்கான காரணம் புரிய வில்லை.

அடுத்த கட்டமாக வன்முறை தொடங்குகின்றது. 2003யூன் ஸ்ரீலங்காவின் கிழக்கு கரைக்கு வெளியில் கப்பல் ஒன்று தகர்க் கப்பட்டு,பல விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். அதேநாள் புலிகளின் உறுப்பினர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் கொல் லப்படுகிறார். இவற்றைத் தொடர்ந்து போர் மனநிலைக்குள் செல்வதான அறிகுறியை வெளிப் படுத்தியதோடு, அச்சுறுத்தலான நிலைப்பாட்டினையும் வெளிப் படுத்தியதாக அமெரிக்கா கருதியது.

அதேவேளை புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையை சரிவரப் பேணவில்லை என நோர்வே தலை மயிலான போர்நிறுத்த கண்காணிப் புக்குழு (SLMM) தெரிவிக்கின்றது. அதனால் நிலைமை மோசமடைகின் றது. போர் நிறுத்த உடன்படிக்கை அபாயமான நிலைக்கு சென்றுள்ள தாக 2003 நவம்பர் நோர்வே பிரதி அமைச்சர் வீதார் ஹெல்கிசன் தெளிவுபடக் கூறுகின்றார்.

"நிலைமைகள் மோசமடைந்ததை தொடர்ந்து நோர்வே தரப்பு விரக்தி நிலைக்குள் தள்ளப்படுகின்றது" என 2004 ஜீன் மாதம் அமெரிக்கா தெரிவிக்கின்றது. போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடுநிலை வகிக்கவில்லை என அரச தலைவர் சந்திரிக்கா குமாரதுங்கா குற்றம் சாட்டியபோதும், அவர் சமாதா னத்தை விரும்பினார். அதேவேளை புலிகள் எளிதில் வளைந்து கொடுக் காத,கடுமை கொண்டவர்களாக அமெரிக்காவினால் பார்க்கப்பட் டனர்.

சந்திரிக்கா குமாரதுங்க சமாதான முயற்சி தொடர்பாகவும், நோர்வே தொடர்பாகவும் நேர் மறையான நிலைப்பாட்டினைக் கொண்டிருப் பதாகக் கருதப்படுகின்றது.



அதேவேளை் சந்திரிக்கா அரசாங்கத்தின் கூட்டணிக்கட்சியான ஜே.வி.பி நோர்வேக்கு விரோதமான அணுகுமுறையை கொண்டிருந்தது. ஊடகங்களில் நோர்வே கடுமையாகத் தாக்கப்பட்டது. நோர்வே புலிகள் சார்பு நிலைப்பாடு கொண் டிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்ட கடிதம் ஒன்றினை ஜே.வி.பி தலை வர் சிறீலங்காவிற்கான நோர்வே தூதுவர் Hans Brattskar இற்கு அனுப்புகின்றார். அக்கடிதத்ததில் நோர்வே இராஜதந்திரிகளைத் தான் சந்திக்க மறுப்பதாக எடுத்துரைக்கின்றார். ஜே.வி.பி- பிரசாரத்தினையிட்டு அரசதலைவர் சீற்றம் கொண்டதாக அமெரிக்க ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

நேரடியாக உரையாடிக்கொள் ளாத அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில்



எல்லாநேரத்திலும் 'அஞ்சல் அலுவலர்' பணியினை நோர்வே முன்னெடுத்தது. புலிகள் சமாதானத்தின் மீது உண் மையான விருப்பம் கொண்டி ருப்பதை சந்தேகிப்பதாக தெளி வாகப் குறிப்பிட்ட கடிதம் ஒன் றினை 2005 மே மாதம் ஜான் பெத்தர்சன் (அன்றைய வெளி யுறவு அமைச்சர்), புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபா கரனுக்கு அனுப்பி வைத்தார். மிகவும் நெருக்கடியான இந்த சூழலில் முன்னேற்றகரமான திசையில் புலிகள் அடியினை எடுத்து வைக்கத்தவறினால் அனைத்துலக பிரதி பலிப்பு மோசமானதாக அமையுமென வெளிப்படையான சீற்றத்துடன் ஜான் பெத்தர்சனின் கடிதம் அமைந்தத்.

11அம் பக்கம் பார்க்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் உறுப்பினர்களைக் கொண்ட கொள்ளைக் கும்பலொன்று கைது

(கொழும்பு)

பொலிஸ் உறுப்பினர்களைக் கொண்ட கொள்ளையர் கும்பல் ஒன்றை சீதுவைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன் அவர்களிடமிருந்து 50 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் இரகசிய புலனாய்வுப் பிரிவின் சார்ஜன்ட் தர அதிகாரிகள் இருவரும் விசேட அதிரடிப்படை சார்ஜென்ட் ஒருவரும் மற்றும் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் உள்ளடங்குவதாகத் தெரியவருகின்றது.

அவர்களுடன் ஆறு பொதுமக்களுமாக சேர்ந்தே ஒரு கும்பலாக இயங்கி வந்துள்ளார்கள் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்து சீதுவைப் பிரதேசத்துக்கு வரும் இளைஞர்களை மிரட்டி அவர்களிடமிருக்கும் பெறுமதியான பொருட்கள் மற்றும் பணம் என்பவற்றைப் பிடுங்கிக் கொண்டு கொள்ளையடிக்கும் தொழிலில் அவர்கள் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

அத்துடன் வெளிநாடு செல்லவரும் இளைஞர்கள் தங்கியிருக்கும் விடுதிகளைச் சோதனையிடும் நோக்கில் அவர்களிடமிருக்கும் கடவுச்சீட்டுக்கள் போலியானதென்று பயமுறுத்தி கப்பம் வாங்குவதிலும் அவர்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

தற்போது அவர்கள் தொடர்பான விசாரணைகள் சீதுவைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது.

(ஸ்ரீ-4)

## அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



ஏழாலை மேற்கைச்சேர்ந்த சரவணை தில்லைநாதன் கடந்த 13 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிபதி அ. பிறேம்சங்கர் முன்னிலையில்அகிலஇலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

கடந்த 12 வருடங்களுக்கு மேலாக வடமாகாண சமாதான நீதவானாக கடமையாற்றிய இவர் வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மத்தியஸ்தராக கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# மறைத்து வைக்கப்பட்ட கைத்தொலைபேசிகள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது

## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சில கைதிகளின் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வி.ஆர்.சில்வா தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள சகல சிறைச்சாலைகளுக்கும் கையடக்கத் தொலைபேசிகொண்டு செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கைதிகளைப் பார்வையிட வருபவர்கள் முதல் சிறைக்காவலர்கள்,அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என எவரும் கையடக்கத் தொலைபேசியை கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இதனையடுத்து களுத்துறை , மாத்தறை சிறைச்சாலைகளில் கையடக்கத் தொலைபேசி தடைசெய்யப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். சிறைச்சாலைக்குள் கையடக்கத் தொலைபேசி தடைசெய்யப்பட்டிருந்தாலும் சில கைதிகள் தொலைபேசியை உடலுக்குள் மறைத்துக்கொண்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## யுனிசெப் நிறுவனத்தால் கிணறு,தண்ணீர் தாங்கி அமைப்பு

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவர்களின் நலன் கருதி யுனிசெப் நிறுவனத்தினரால் சுமார் 12 இலட்சம் ரூபா செலவில் கிணறு மற்றும் தண்ணீர் தாங்கி என்பன அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது.(ஸ்ரீ-3-29)

# புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் மூலம் பாதிக்கப்படுபவரிடம் இருந்து பணம் அறவிடப்படும்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

புகைப்பிடித்தல் மற்றும் மதுபானம் அருந்துதல் ஆகியவற்றின் காரணமாக நோய் வாய்ப்படும் நபர்களிடமிருந்து பணம் அறவீடு செய்து சிகிச்சை அளிப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புகைப்பிடித்தல் மற்றும் மதுபானம் அருந்துவதன் காரணமாக பாதிக்கப்பட்டு அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்படுவோரிடமிருந்து பணம் அறவீடு செய்யப்படும் என சுகாதார அமைச்சு அறிவித் துள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் புகைப் பிடித்தல் மற்றும் மதுபான பாவனையை குறைக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

புகைப்பிடித்தல் மற்றும் மதுபாவனையினால் நீரிழிவு, இரத்த அழுத்தம்,புற்றுநோய் ,சிறுநீரகம் செயலற்றுப்போதல் ,பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொற்றாத நோய்களில் நாள் ஒன்றுக்கு 350 பேர் இலங்கையில் உயிரிழப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 80 வீதமானவர்கள் 40 தொடக் கம் 50 வயது வரையிலானவர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

ஆண்களே அதிக அளவில் உயிரிழப்பதாகவும் இதனால் குடும்பம் பொருளாதார ரீதியாக நலிவடைவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# மெனிக்பாம் அகதிகளின் பணத்தை மோசடி செய்த பெண் கைது

(கொழும்பு)

வவுனியாவிலுள்ள மெனிக்பாம் நிவாரணக் கிராமத்தில் அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் அந்த மக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்தும் வகையில் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவினை மோசடி செய்த பின் தலைமறைவாகிய பெண் நுவரெலியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த அமைப்பின் பொருளாளராகச் செயற்பட்ட 21 வயது இளம் பெண்ணே கைது செய்யப்பட்டவராவார்.

இந்தப் பெண் வங்கி இருப் பிலிருந்து மேற்குறித்த தொகையினை மீளப் பெற்றுத் தலைமறைவாகி விட்டதாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்தே இவர் நுவரெலியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# தேங்காய் களஞ்சிய தொகுதி ஒன்றை கொழும்பில் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

தேங்காய் களஞ்சிய தொகுதி ஒன்றை கொழும்பில் அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக கொழும்பில் கட்டட வசதிகளை பெற்றுக் கொண்டுள்ளதாக தெங்குஅபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்படுகின்ற தேங்காய்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதன் மூலம் குறைந்த விலையில் மக்களுக்கு தேங்காயை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச் சர் ஜகத்புஸ்பகுமார கூறினார். (ஸ்ரீ-2-9)

# இலங்கை போரின் விளிம்பில்....

*10ஆம் பக்கத் தொடர்ச்சி...*

2005 நோர்வேயில் புதிய அரசாங்கம் பதவி ஏற்கிறது. எரிக் சொல்ஹெய்ம் அபிவிருத்தி அமைச்சர் பதவி ஏற்கின்றார்.ஜோன் ஹன்சன் பௌவர் சிறப்புத் தூதராக நியமிக்கப்படுகின்றார். அரசாங்க மாற்றம் சமாதான முயற்சியைப் பாதிக்கப்போவதில்லை. புதிய அரசாங்கம் சமாதான முயற்சியில் முன்னைய அதே அணுகு முறையையே பின்பற்றும்.

'சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் விரும்பாத பட்சத்தில் நோர்வே சமாதானப் பேச்சுக்களை நடாத்த முடியாது' என ஹன்சர் பௌவர் தெரிவிக்கின்றார்.

விடுதலைப் புலிகளும் அரசாங்கப் படைகளும் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறுவதாக பின்னர் ஹன்சன் பௌவர் தெரிவிக்கின்றார். சிறிலங்காவின் ஊடகங்களில் நோர்வே தொடர்ச்சியாக விமர்சிக்கப்படுகின்றது. அதனால் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்திற்கு நெருக்கடிகள் அதிகரிக்கின்றன.

மே 2006 மட்டில் அமெரிக்காவிற்கு ஒரு விடயம் தெளிவாகின்றது. 'சிறிலங்கா போரின் விளிம்பில் நிற்கின்றது' என கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் வோஷிங்டனுக்கு அறிவிக்கின்றது.

ஒரு மாதத்தின் பின்னர், சமாதான முயற்சி முற்றிலும் குழம்புகின்றது.நோர்வேபிடியை இழந்து விட்டதான நிலை தோன்றுகின்றது. இதற்கு முன் அவர்கள் இவ்வாறு நம்பிக்கையீனத்துடன் காணப்படவில்லை. இருந்தபோதும் நோர்வேயின் பங்கு குறித்து அமெரிக்கா மிகுந்த திருப்தி கொண்டுள்ளது. நோர் வேயின் பொறுமைக்கும் செயற் துணிவுக்கும் உச்ச மதிப்பெண் வழங்க வேண்டுமென்ற கருத்தை அமெரிக்கா கொண்டுள்ளது.

தொடர்ந்து கிழக்கிலும் வடக்கிலும் முழு அளவில் போர் தொடங்கியது. விடுதலைப்புலிகளின் தலைமையை முற்று முழுதாக சிறிலங்கா படைகள் அழித்தொழித்த 2009 மே வரை போர் நீடித்தது. இறுதிப்போரின் போது பல ஆயிரக்கணக்கான தமிழ்ப் பொது மக்கள் கொல்லப் பட்டனர். பல ஆயிரம் பேர் இன்னும் அகதி முகாம்களில்உள்ளனர்.

இவ்வாறு விக்கிலீக் ஆவணங்களை முன்வைத்து நோர்வேயின் முன்னணி நாளிதழான ஆப்தன் போஸ்தன் எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்து தமிழ்த் தேசிய மக்களின் முன்னணி விசனம்!

தேசிய அட்டைகளை அறிமுகம் செய்யும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்!

புலிகளுடன் தொடர்பான தாவுத் இப்ராஹாமின் குழு உறுப்பினரிடம் விசாரணை!

சிறிலங்காவின் போர்க்குற்றங்கள் விசாரணையை வலியுறுத்தும் வில்லியம் ஹேய்க்!

சொந்த இடங்களில் மீளக் குடியேற்ற சம்பூர் மக்கள் கோரிக்கை!

புலம்பெயர்ந்தோரின் இணையத்தளங்கள் தொடர்பாக படைத்தரப்புப் விசாரணை!

பொலிஸாருக்கு கொலை அச்சுறுத்தல்; இரு கடற்படையினர் தடுப்பு காவலில்...

## க.பொ.த சாதாரண தர பரீட்சையில் ஆள்மாறாட்டம்

தற்போது இடம்பெற்று வரும் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் ஆள்மாறாட்டம் தொடர்பான மூன்று சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. மதுகம, றம்பேவ மற்றும் கண்டி ஆகிய இடங் களிலேயே இந்த ஆள்மாறாட்டச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இது சம்பந்தமான பொலிஸ் அறிக்கை இன்னும் தனக்குக் கிடைக்கவில்லை என்றும் அதன் பின்னரே விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## விபத்தில் சேதம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கொடிகாம வீதி முள்ளிச் சந்தியில் எதிரே வந்த ஜீப் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தின் போது பேருந்து வண்டியும் ஜீப் வண்டியும் பலத்த சேதங்களுக்குள்ளானது. (ச-7-61)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 ஆசிரிய ஆலோசகர்கள் வடக்கு மாகாணத்தில் நியமனம்

(திருகோணமலை)

வடக்கு மாகாணக் கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரிய ஆலோசகர்கள் பதவிக்கு 90பேரை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தகவல் தருகையில்,

வடக்கு மாகாணக்கல்வி வலயங்களில் நிலவும் ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு 90 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நியமனம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான வெற்றிடங்கள் முழுமையாக நிரப்பப்படாத நிலையில் அடுத்தகட்ட நியமனத்திற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன.இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். நியமனம் பெற்றோரின் பெயர் விபரம் வருமாறு,

**யாழ்ப்பாண வலயம்**

ப.இராமகிருஷ்ணன்- இரண்டாம் மொழி சிங்களம் (யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), ஐயாத்துரை தயாபரன்- விஞ்ஞானம் (யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), திருமதி எ.ஜெ.பொ.பத்மாவதி-ஆரம்பக்கல்வி (யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்), திருமதி சோ.கலாநாயகி - ஆரம்பக்கல்வி (யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), திருமதி.மைதிலி தேவராஜா -ஆரம்பக் கல்வி (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

திருமதி எ.ஜெ.புத்திசிகாமணி-ஆலோசனையும் வழிகாட்டலும் (யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), வ.செந்தூரன்-சுகாதாரமும் உடற்கல்வியும் (யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி), நவரத்தினம் சிறிமுருகதாஸ்காந்தன் -சுகாதாரமும் உடற்கல்வியும் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), செல்வி சிவசித்ரா பழனி- சமூகக்கல்வியும் வரலாறும் (யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி), குமாரசாமி விஜயகுமார்-கணிதம் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி).

**வலிகாம வலயம்**

கு.சிவகுமார் - ஆரம்பக்கல்வி (யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை), திருமதி ஜெ.றிச்சட்றேமன் -கிறிஸ்தவம் (யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), திருமதி கருணாமலர் மோகனசுந்தரம் - மனைப்பொருளியல் (யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்), செல்வி ஞானசோதி மகேந்திரன்-தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (யா/வட்டு இந்துக்கல்லூரி), திருமதி ஜெ.மயில்வாகனம் -ஆரம்பக்கல்வி (யா/ மகாஜனாக் கல்லூரி)

**வடமராட்சி வலயம்**

இரவீந்திரன் யசோதரன் -ஆரம்பக்கல்வி (யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), கார்த்திகேசு சிவம் -விஞ்ஞானம் (யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), ஐயாத்துரை செல்வராசா-ஆங்கிலம்(யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), நாகப்பர் கந்ததாசன் -ஆங்கிலம் (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), திருமதி கலாநிதி மகாலிங்கம் -சமூகக் கல்வியும் வரலாறும் (யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்), இராசகோபால் ராஜசீலன் -சுகாதாரமும் உடற்கல்வியும் (யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), திருமதி டொ.பு. மன்மதநாயகம் -கிறிஸ்தவம்(யா/விக்னேஸ்வராக் கல்லூரி), இரத்தினம் நித்தியகுமார் -வர்த்தகம் (யா/ ஹாட்லிக் கல்லூரி), சண்முகநாதன் கருணாகரன் -ஆலோசனையும் வழிகாட்டலும் (யா/புற்றளை மகாவித்தியாலயம்), க.ஆ.ச.கோபிநாத் -கணிதம் (யா/ ஞானாசாரியார் கல்லூரி).

**தென்மராட்சி வலயம்**

துரைசிங்கம்செல்வராசா - கணிதம் (யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்), திருமதி சுகிர்தராணி நகுலேஸ்வரன் -முறைசாராக் கல்வி (யா/சந்திரபுர ஸ்கந்தவரோத மகாவித்தியாலயம்), திருமதி சிவநங்கை உருத்திரமூர்த்தி தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி), திருமதி புனிதகுமாரி ஈழநேசன் -சங்கீதம் ( வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி), நாகரத்தினம் இராஜன் - சித்திரம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நடராசா ஸ்ரீகாந்தா-சுகாதாரமும் உடற்கல்வியும் (யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்).

**தீவக வலயம்**

முருகையா கேசவன் -ஆரம்பக்கல்வி (யா/ காரை ஊரி அ.மி.த.க.பாடசாலை), குமாரசாமி செல்வகுமார்-ஆரம்பக்கல்வி (யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்), துரைராஜா கிருபாகரன் -ஆரம்பக்கல்வி (யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்), மகாலிங்கம் சத்தியகுமார் -சமூகக்கல்வியும் வரலாறும் (யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்), செல்வி துஷ்யா திருச்செல்வம் -சுகாதாரமும் உடற்கல்வியும் (யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலயம்), நாகராசா இராதாகிருஷ்ணன்- இந்துசமயம் (யா/நயினாதீவு மகா வித்தியாலயம்), டோமினிக் யூட்ஸ்கிங் -கிறிஸ்தவம் (யா/நெடுந்தீவு றோ.க.த.க. பாடசாலை), கனகசபை பிரபாகரன் -சித்திரம் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

**கிளிநொச்சி வலயம்**

திருமதி தவரஜனி லோகநாதன் -ஆரம்பக் கல்வி (கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம்) பாலையா ஸ்ரீஸ்குமார்-ஆரம்பக்கல்வி (கிளி/இயகக்ச்சி அ.த.க.பாடசாலை), சுந்தரம் சிவபாலன் -ஆரம்பக்கல்வி (கிளி/ இயக்கச்சி அ.த.க.பாடசாலை), அமிர்தலிங்கம் பௌநந்தி -தமிழ்(கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்), அம்பலம் ஜெயகணேசன் -கணிதம் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), தர்மராஜா செந்தில்குமரன் -கணிதம் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), குணசிங்கம் பிரதீபன் -விஞ்ஞானம் (கிளி/பளை மத்திய கல்லூரி), பாலகிருஸ்ணன் சிவஞானம் -ஆங்கிலம் (கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்), குமாரசாமி சுகுமார் -சுகாதாரமும் உடற்கல்வியும் (கிளி/பூநகரி மகாவித்தியாலயம்), அருளானந்தம் ஸ்ரீகாந்தன் -விவசாயம் (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்), தாயுமானவர் நிகேதன் -இந்துசமயம்(கிளி/பாரதி வித்தியாலயம்), திருமதி மனோரதி கணேசலிங்கம் -நடனம் (கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), குலவீரசிங்கம் கோகுலன் -சங்கீதம் (கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), தருமலிங்கம் மயூரன் -சித்திரம்(கிளி/கண்டாவளை மகாவித்தியாலயம்), திருநாவுக்கரசு சிவரூபன் -வர்த்தகம் (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), சின்னத்துரை இளங்குமரன் -முறைசாராக் கல்வி (கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்), திருமதி புஸ்பராணி ஆனந்தசிவம் -ஆலோசனையும் வழிகாட்டலும் (கிளி/ குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம்), கந்தசாமி குமணன் -தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி)

**முல்லைத்தீவு வலயம்**

சாந்தகுமாரி கமலகாந்தன் -சங்கீதம் (மு/முல்லைத்தீவு மகாவித்தியாலயம்), சிவானந்தம் ஏகாம்பரம் -முறைசாராக்கல்வி (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), கனகரத்தினம் நவநீலன் -ஆலோசனையும் வழிகாட்டலும் (வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு), திருமதி சுகந்தினி சர்வேஸ்வரன் -விசேட கல்வி(வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய்), திருப்பரங்கிரிநாதன் செந்தில்நாதன் -தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்)

**மன்னார் வலயம்**

ம.றெ.பிறின்ஸ் டயஸ் -சமூகக்கல்வியும் வரலாறும (மன்/புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி),பறுநாந்து ஞானராஜ் -சுகாதாரமும் உடற்கல்வியும்(மன்/புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி), தி.கொ.அருளானந்தன் கொடுதோர்-வர்த்தகம் (மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), மகாலிங்கம் விஸ்வமூர்த்தி -சங்கீதம் (மன்/புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி)

**மடுவலயம்**

செபமாலை கொன்சன்ரைன் -சமூகக் கல்வியும் வலாறும் (மன்/திருக்கேதீஸ்வரன் இ.த.க.பாடசாலை), பெனடிக்ற் எட்வேட் அல்றின் லெம்பேட்-சுகாதாரமும் உடற்கல்வியும் (மன்/மடுக்கரை அ.த.க.பாடசாலை), சவேரிதாசன் செல்ரன் யூடிற் -கிறிஸ்தவம் (மன்/ஓலைத்தொடுவாய் றோ.க.த.க.பாடசாலை), குழந்தைவேல் நாகநாதன் -தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம் (மன்/கருங்கண்டல் றோ.க.த.க.பாடசாலை), அ.ஜோ.பொஸ்கோ-ஆரம்பக் கல்வி (மன்/மடுக்கரை அ.த.க. பாடசாலை)

**வவுனியா வடக்கு வலயம்**

அரியரட்ணம் அமலேஸ்வரன் -விவசாயம் (வ/பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்), ஜெயராஜ் சஜித்குமார் -சமூகக்கல்வியும் வரலாறும் (வ/கோவில்புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம்), கிருஷ்ணசாமி மங்களகுமார் -சுகாதாரமும் உடற்கல்வியும் (வலயக்கல்வி அலுவலகம்),இராசாரத்தினம் பாக்கியநாதன் -வர்த்தகம் (வ/புதுக்குளம் மகாவித்தியாலயம்)

**வவுனியா தெற்கு வலயம்**

செல்வரட்ணம் விஜயகாந்தன் -ஆரம்பக் கல்வி (வ/ஸ்ரீ நாகராஜா வித்தியாலயம்), திருமதி விஜயகாந்தன் செந்தமிழ்ச்செல்வி-ஆரம்பக்கல்வி (வ/மகாறம்பைக்குளம் அ.த.க.பாடசாலை), திருமதி த.நிறைமதி -தமிழ் (வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), திருமதி வசந்தகுமாரி குலராஜா -இந்துசமயம் (வலயக் கல்வி அலுவலகம்), அ.ற.முஹம்மத் ஜெமீல் -இஸ்லாம்(வ/அறபா முஸ்லிம் வித்தியாலயம்), திருமதி சூரியயாழினி வீரசிங்கம் -நடனம் (வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), செல்வி சூ.சாந்தா கிறிஸ்ரீன்- சங்கீதம் (வ/ மூன்றுமுறிப்பு அ.த.க.பாடசாலை)

திருமதி மாலினி புலேந்திரராஜா-மனைப்பொருளியல் (வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்), கிறிஸ்தோடியூட் பரதமாறன்-சுகாதாரமும் உடற்கல்வியும் (வ/இராசேந்திரகுளம் அ.த.க.பாடசாலை), கதிரவேலு திருவருள்நேசன்- முறைசாராக்கல்வி (வ/ சித்திவிநாயகர் வித்தியாலயம்), ஆறுமுகம் சுபாஸ்கரன்-ஆலோசனையும் வழிகாட்டலும்(வ/அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம்), வெள்ளையன் சுப்பிரமணியம்-விசேடகல்வி (வலயக்கல்வி அலுவலகம்), மதார் சாஹிபு நளீம்-இஸ்லாம் (வ/ தாருல் உலூம் முஸ்லிம் வித்தியாலயம்), சிவசுப்பிரமணியம் ஸ்ரீதர்-ஆங்கிலம் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), மகாலிங்கம் முரளீதரன்-ஆரம்பக்கல்வி (வ/ கல்மடு மகா வித்தியாலயம்) . (ஸ்ரீ-5)

# கனடாவுக்கு அனுப்புவதாக மோசடி செய்த நபர் இரண்டரை வருடங்களின் பின் கைது

## குற்றத்தை ஒப்புக்கொண்டதால் பிணையில் விடுதலை

கனடாவில் தொழில் வாய்ப்பினை பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் 19 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த நபர் ஒருவர் இரண்டரை வருடங்களின் பின்னர் ஊழல் மோசடிப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு முகத்துவாரம் பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நபர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட நபருக்கு மாதந்தோறும் ஒவ் வொரு இலட்சம் ரூபா வீதம் மோசடி செய்த தொகையினை திருப்பிச் செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கொழும்பு 15 முகத்துவார சென்ஜேம்ஸ் வீதியில் வசித்த குறித்த நபர் வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த மகாலிங்கம் என்பவரிடம் குறித்த பண மோசடியை செய்துள்ளார்.

அதாவது கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆம் திகதி மகாலிங்கத்தை மலேசியாவிற்கு குறித்த நபர் அனுப்பியுள்ளார். அங்கிருந்து மூன்று வாரங்களில் கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி மகாலிங்கத்திடமிருந்து தனது நடைமுறைக்கணக்கிற்கு பணத்தை வைப்பிலிடுமாறு கூறி பணத்தை பெற்றுள்ளார்.

இவ்வாறு பணத்தை பெற்றுக் கொண்டபின் குறித்த நபர் மகாலிங்கத்தை மலேசியாவில் கைவிட்டுச் சென்றுள்ளார். இதன் பின்னர் மகாலிங்கம் மலேசியாவில் சுமார் 5 மாதங்களாக பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து மனவேதனையுடன் கடந்த 2007 டிசம்பர் மாதம் இலங்கை திரும்பியுள்ளார்.

நாடு திரும்பிய பின் அவர் குறித்த நபர் தொடர்பாக ஊழல் மற்றும் மோசடி பிரிவு பொலிஸாரிடம் இதுகுறித்து, முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாடு செய்ததனை அறிந்த சந்தேகநபர் இரண்டு வாரங்களிற்குள் நாட்டைவிட்டு தப்பிச் சென்றுள்ளார். இதன்பின் தற்போது மீண்டும் இலங்கை திரும்பியிருந்த போதே கைதுசெய்யப்பட்டு புதுக்கடை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் தான் செய்த குற்றத்தை ஏற்றுக்கொண்டதால் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு மாதம் முதல்வாரத்தில் மோசடிப் பிரிவு பொலிஸாரிடம் கையொப்பம் இடவேண்டுமென்றும், நீதிமன்றின் உத்தரவின்றி நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# காணிகளை இராணுவம் கைப்பற்றியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

70 வருடங்களுக்கு மேலாக தாம் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவத்தினர் கம்பி வேலிகளை அமைத்து ஒதுக்கி கொண்டுள்ளமைக்கு எதிராகதுன்னான பிரதேச விவசாயிகள் கொழும்பு- அவிசாவளை பிரதான வீதியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தை ஜயசுமனாராம விகாரைக்கு எதிரில் நின்று வீதியை மூடி இந்தப் பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தி யுள்ளனர்.

எல்லைகளை வரையும் போது, விவசாயிகளின் வயற்காணிகள் கையகப்படுத்தப் படமாட்டாது என உறுதியளிக்கப்பட்டிருந்ததாகவும் இந்த உறுதிமொழி மீறப்பட்டதை எதிர்த்தே விவசாயிகள் இந்த ஆர்ப்பாட்டத்தை சுமார் ஒரு மணிநேரம் நடாத்தினர். இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக வாகன போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன. இதனையடுத்து பாதுக்க பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகன போக்குவரத்துக்கு இடமளித்தனர். (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவியார் போறவிடம் பள்ளமும் திட்டியும்

~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சாவகச்சேரி நகரத்தின் வீதியில் சிந்துநடைக் கூத்து

எங்கள் வீதிகளின் நிலைமைகளைப் பார்த்தால் தமிழர்களின் தலைவிதி தெரியும். குன்றும் குழியுமாகக் காட்சியளித்த வீதிகள் மழைக்குப் பின் அதல பாதாளக் கிடங்குகளாய் மாறிவிட்டன.

இதன் காரணமாக இப்போதெல்லாம் சேதமடைந்த வீதிகள் என்று செய்தி பிரசுரிப்பது அபத்தம். அது செய்தியுமாகாது.

மாறாக சேதமில்லாத வீதி ஏதும் உண்டாயின் அதுவே செய்தியாகும். அந்த அளவிற்கு வீதிகளின் நிலைமை படு மோசமாகிவிட்டது.

இருந்தும் உடைந்த வானத்தை சிற்றெறும்பின் தோல் எடுத்துத் தைத்துவிடும் சில முயற்சிகளும் நடைபெறுவதைப் பார்க்கும்போது, தலையிலடித்து குய்யோ என்று கத்திக் கதற வேண்டும் போல் உள்ளது.

அந்த அளவிற்கு எங்கள் அரச அமைப்புக்களின் செயற்பாடுகள் இருக்கின்றன.

பரவாயில்லை; யாழ்.குடாநாட்டில் மிகவும் அதிகமாகச் சேதமடைந்த வீதி எது என்று ஒரு போட்டி அறிவித்தால் எம்மைப் பொறுத்தவரை சாவகச்சேரி நகரத்தை உள்ளடக்கிய ஏ-9 வீதியே முதலிடத்தைப் பெறும் என்று சொல்வோம்.

இதை சொல்லும்போது ஏன் பண்ணை வீதிக்கு முதலிடம் கொடுக்க முடியாதா என்று நீங்கள் ஆட்சேபம் தெரிவிப்பதும் கேட்கிறது.

பண்ணை வீதிக்கு முதலிடம் கொடுக்கலாம் என்பதில் நானும் உடன்பாடுதான். ஆனால் சாவகச்சேரி நகரப் பகுதியை உள்ளடக்கிய ஏ-9 வீதி குன்றும் குழியுமாக இருப்பது மட்டுமன்றி அந்த வீதியால் பயணிப்போர் ஆசனத்திலிருந்தவாறு சிந்துநடைக் கூத்தை நடிக்க முடிகின்றது.

வழமையில் சிந்துநடையை மேடைகளில் நடித்துக் காட்டுவார்கள். இதற்காக பயிற்சியும் எடுக்க வேண்டும்.

சாவகச்சேரி நகரத்தை அண்டிய ஏ-9 வீதியோ பஸ் வண்டிகளில் இருக்கும் பயணிகளை மிக அற்புதமாக சிந்துநடைக்கூத்தை நடிக்க வைக்கின்றது.

அப்படியானால் அதற்குத் தானே முதலிடம் கொடுக்கவேண்டும். எமது தெரிவுக்கு நீங்கள் மௌனமாக இருப்பது உங்கள் சம்மதத்தை தெரிவிப்பதாகவே கருதுகின்றோம்.

ஆனால், அந்த முதல் பரிசை யாருக்கு வழங்குவது என்பதுதான் இப்போதிருக்கின்ற சிக்கல். பரிசை யாருக்கு வழங்கலாம் என்ற தெரிவை உங்களிடம் விட்டுவிடுவதுதான் நடுநிலைக்கு அழகு.

## கல்விசாரா ஊழியர் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை

கல்விசாரா ஊழியர் வகுப்பு IIIக்கு (சமையல் தொழிலாளி, சுகாதாரத் தொழிலாளி) ஆகியோருக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 26, 27, 28, 29, 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 26, 27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் இப்பரீட்சை நடைபெறும். முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளிலும் மன்னார் மாவட்டத்தில் இன்றும் மற்றும் 29 ஆம் திகதியும் வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் 26, 27, 28 மற்றும் 29 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

மேலும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் தேசிய அடையாள அட்டை (தேசிய அடையாள அட்டை இல்லாத விடத்து தமது ஆளடையாளத்தை நிரூபிக்கும் புகைப்படத்துடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆவணங்கள்), பிறப்புச் சான்றிதழ் (பெயரில் வித்தியாசமிருப்பின் சத்தியக் கடதாசி சமர்ப்பித்தல் வேண்டும்), கல்விச்சான்றிதழ் (அதிகூடிய கல்விச் சான்றிதழ்) அல்லது பாடசாலை விடுகைப்பத்திரம், கிராம சேவை அலுவலரிடமிருந்து, பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ், அத்துடன் கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் ,வேறு விசேட தகைமைகள் இருப்பின் அவை தொடர்பான சான்றிதழ்கள், பாடசாலையில் தற்போது சேவையிலிருப்பவராயின் அது தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றுடன் குறிக்கப்பட்ட திகதியன்று அவ்வவ் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு தவறாது சமுகமளிக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல் .இளங்கோவன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## நாட்டியாஞ்சலியும் இசை அஞ்சலியும்

சிவசுப்பிரமணியக் குருக்கள் அறக்கொடை நிதியத்தினரால் கனடா வாழ் நவரச நாயகி ஜெயதருணி ஜெயபாலேந்திரன் மற்றும் ஷட்டிகா கமல்ராஜ் குருக்கள் ஆகியோரின் நாட்டியாஞ்சலி நிகழ்வும் கனடாவாழ் தட்ஷாயினி மணிவாசகனின் இசை அஞ்சலியும் நாளை பிற்பகல் 5.30 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் வண்ணை வீரமாகாளியம்மன் ஆலய அன்னை பூரணி அலங்கார மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, சிறப்பு விருந்தினராக வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் கமலேஸ்வரி பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-7)

## யாழ். மாவட்டத்தில் இதுவரை மின்சாரம் விநியோகிக்கப்படாத பிரதேசங்களுக்கு மின்விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இதுவரை மின்சாரம் கிடைக்கப் பெறாத பல பிரதேசங்களுக்கு விரைவில் மின் விநியோகம் மேற்கொள்ள ஈ.பி.டி. பி.பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிர தித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நடவடிக்கை எடுத்துள்ளார். அதன்படி விரைவில் சண்டிலிப்பாய் வடக்கு, பொக்காவளை, பெரியவிளான் பிள்ளையார் கோவிலடி, பெரிய விளான் அந்தோனியார் கோவிலடி, இளவாலை, உயரப்புலம், சண்டிலிப்பாய், தொட்டிலடி, மடத்தடி, உரும்பிராய், சமாதியடி நீர்வேலி, கரந்தன், அச்செழு, பூலகிற்றி, சடையர்க்காடு, இருபாலை வி.எச்.வீதி, செல்வபுரம், அராலி வடக்கு, பெரிய தம்பிரான் போன்ற பிரதேசங்களுக்கு மின் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சந் திர குமார் இப்பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு நிலைமைகளை அறிந்து கொண்ட தோடு ஒரு சில மாதங்களுக்குள் இப்பிரதேசங்களுக்கான மின்னிணைப்பை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார். (ஸ்ரீ-4)

## உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்டம் மீதான விவாதம் ஜனவரி 4 இல் ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்ட மூலம் மீதான பாராளுமன்ற விவாதம் எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொகுதிவாரி முறையையும் விகிதாசார முறையையும் இணைத்து கலப்பு முறையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

இதன்படி உத்தேச தேர்தல் முறை திருத்தச் சட்டம் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் புதிய முறைப் படி நடத்துவதா பழைய விகிதாசார முறைப்படி நடத்துவதா என இது வரை அமைச்சரவையில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என அமைச் சர் கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை புதிய முறையின் கீழ் நட த்த அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது தெரிந்ததே. (ஸ்ரீ-2)

## தையற்கடை உடைத்து திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஐயாகடைச் சந்தியில் உள்ள தையற்கடை கடந்த வெள்ளிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு தையல் இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றி தெரியவரு வதாவது,

குறித்த தையலகத்தின் முன் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் தையல் இயந்திரம் மற்றும் துணிகள் , தைத்த உடைகள் , வானொலிப்பெட்டி, மணிக்கூடு என்பவற்றை களவாடியுள்ளனர்.

இதுகுறித்து யாழ்.பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)

## நல்லதை நினைத்து நல்லதையே செய்

இறைவன் ஏழைகளுடன் உறவாடுகிறான் என்பதன் உட்பொருள், மனிதன் தன்னிடம் சகல வாய்ப்புக்களும் காணுமிடத்து அயலவ னையோ? அடுத்த ஜீவராசியையோ ஏன் இறைவனைக் கூட நினைத்துப் பார்பதில்லை.

இதனாலேயே இயேசு பெரு மான் துன்பப்படுபவன் பாக்கிய சாலி என்று அருளினார்.

ஏழை எனும் போது பொருளா லோ, உடல் ஊனத்தாலோ, தீராத நோயாலோ வருந்துபவன் இந்த மண்ணின் வாழ்வில் மனக்குறை வைக் காண்கின்றான். குறைவினால் வருந்தும் போது , இயலாமை காணும்போது இறைவனைத் தன் மனக்கண்முன் நினைக்கின்றான். இதுவே இறைவன் ஏழையின் சிரிப்பில் உதயமாகக் காரணமாகின்றான்.

படித்தவன், பாமரன் யாபேரும் இறைவனில் பேதமை காண்கிறார்கள். ஆனால் இறைவனில் பேதமும் கிடையாது பேதமையும் கிடையாது. ஆனால் மனிதன் தன் பேதமையால் பேதங்களை உருவாக்கி பெரும் களேபரம் ஆக்குகின்றான்.

ஒவ்வொரு மதங்களுக்கும் ஒவ்வொரு கடவுளின் பெயரைச் சூட்டி இவரே உண்மையான கடவுள் என [illegible] போது மற்றவருடைய மனதை புண்படுத்துகின்றான். இறைவன் அன்பு வடிவானவர். அவ்வாறு இருக்கும் போது இறைவனின் பெயரால் மற்றவரைத் தாழ்த்து வதோ, துன்பப்படுத்துவதோ, முறையாகுமோ?

உலக மென்ற பள்ளியில் நாம் எல்லோரும் மாணவர்களே. இதனால் வேற்றுமைகள் அற்ற ஒற்றுமையை உணர்தல் மிகவும் கஷ்ரமே. ஆனால், உணர்வு ஒன்றுதான். பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அதை நாம் மற்றவர்க்கு செய்தல் வேண்டும். தன்னலம் கருதாமல் மற்றவருக்கு நலம் செய்யும் உதவி இறைவனுக்கு செய்யும் கருமமாகும். இருந்தும் மனிதர்களாகிய நாம் சுயநல அடிப்படையிலேயே பொதுநலம் என்ற ஒன்றைச் செய்கின்றோம்.

ஒரு குடிசையில் தீப்பிடித்தால் அடுத்த வீட்டுக்காரன் ஓடிவந்து தீயை அணைப்பது தன்னலமே. தவறில்லை. அப்படியேனும் மனிதன் பிறருக்கு உதவவேண்டும்.

மனிதன் தன்னிடமிருக்கும் பொருட்களையும் மற்றவரிடம் இருக்கும் பொருட்களையும் பார்த்து ஒப்பீட்ட [illegible] பொறாமைப்படுகின்றான். ஆனால் அவனிடம் இருக்கும் நற்பண்பைத் தவிர; காரணம் சுயநலமே.



கோட்டை கட்டியவனைவிட குளம் வெட்டியவன் உயர்ந்தவன். கோட்டை ஒருவனுக்குத்தான். குளம் அனைவருக்கும். இது பொது நலத் தின் பாற்பட்டது.

தன்னுடைய செல்வம் , அறிவு, ஆற்றல் ஆகியவற்றைச் சமுதாயத்திற்காக செலவளிப்பவன் வணாங் கத் தக்கவன். அவரை விதை விதைத்தால் அவரைச் செடியே முளைக்கும். வெண்டை முளைமுளைக்காது. நாம் எவ்வினையைச் செய்தோமோ அவ்வினைவுதான் வருமே தவிர வேறு ஒன்றும் வராது.

நல்லதையே நினைத்து நல்லதையே கண்டு நல்லதையே கேட்டு நல்லதையே செய்தால் நல்வாழ்வு பெருகும்.

ஜெய் சாய்ராம் யாதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## பண்டிகைக் காலத்தை ஆடம்பரமாக கொண்டாடுங்கள்!

உங்கள் **கொமர்ஷல் வங்கி கிறடிட்** அல்லது **ஷொப்பிங் டெபிட் அட்டைகளை** உபயோகித்து உங்களுக்கு பிரியமான "பஷன் ஸ்டோர்களில்" நவநாகரிக துணிமணிகளைக் கொள்வனவு செய்து அதிக விலைக்கழிவுகளை பெற்று கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 011 2353353




COMMERCIAL BANK
கிறடிட் மற்றும் ஷொப்பிங் டெபிட் அட்டைகள்

இவ் விசேட விலைக்கழிவு ஹவுஸ் ஒப் பெஷன், பெஷன் பக் மற்றும் DSI (ரூபா 1000 க்கு மேற்பட்ட கொள்வனவு) காட்சியறைகளில் 2010 டிசம்பர் 20 முதல் 2010 டிசம்பர் 31 வரை.


# இதயத் துடிப்பை கண்காணிக்கும் 'சிப்'

மனிதர்களின் இதயத்துடிப்பை 24 மணிநேரமும் கண்காணிக்கக் கூடிய ஒரு "மைக்ரோசிப்" பை விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கின்றனர்.

ஓர் அரிசி அளவே உள்ள இந்த 'சிப்', ஒரு நுண்ணிய குழாய்வழியாக இதயத்துக்குள் செலுத்தப்படும். அங்கிருந்தபடியே கண்காணிப்பு வேலையே இது தொடரும்.



இதயத்தின் செயற்பாட்டை அளவிடுவதன் மூலம் செயற்படும் வகையில் இந்த 'சிப்' வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இது ஒரு நொடிக்கு 200 முறை இரத்த அழுத்தத்தை அளவிடும். அதன்மூலம், மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு போன்றவற்றை இந்த 'சிப்' ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துக் கூறிவிடும்.

இந்த 'சிப்' பொருத்தப்பட்டவரின் மார்பு அருகில் ஒரு மருத்துவர் தனது கையடக்கமான 'ரிசீவரை' வைத்தால் போதும்.தான் கண்டுபிடித்தவற்றை அந்த ரிசீவருக்கு 'சிப்' அனுப்பிவிடும்.

இதயத்தைக் கண்காணிப்பதற்கான தற்போதைய தொழில்நுட்பத்தின் குறைபாடு, இதயத்தில் என்ன நடக்கிறது என்று குறுகிய காலத்துக்கு மட்டுமே அது தெரிவிக்கிறது.

நாள் கணக்கில், வாரக் கணக்கில் இதயத்தைக் கண்காணிப்பதில்லை. அந்தக் குறையை இந்த 'சிப்' போக்கிவிடும் என்று கூறப்படுகிறது.

இதன்மூலம், இதயத்தில் பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து விட்டால்,மருந்து, அறுவைச் சிகிச்சை மூலம் இதயத்தின் செயற்பாட்டை சீரமைத்து பாதிப்பைத் தவிர்க்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே

சிறையில் எப்படி அண்ணா இத்தனை நாள் இருந்தீர்கள்?- தம்பிகள் பலரும் தவிப்போடு கேட்கிறார்கள். என் சிறைக்குக் கூரையிருந்தது. நான்குபுறமும் சுவர்கள் இருந்தன. கழிவறையிருந்தது. மூன்று வேளைகளும் சாப்பாடு வந்தது தம்பிகளே! ஆனால் எந்தத்திசையிலும் தடுப்பில்லாது கால் நீட்டி அமரக்கூட நிலமில்லாமல் மழையிலும் குளிரிலும் தத்தளித்தபடி முள் வேலிக்குள் முடக்கப்பட்டுக்கிடக்கும் என் உறவுகளின் நிலையை ஒப்பிட்டால் என் சிறை வலி... ஒரு விஷயமேயில்லை.

சிறையிலிருந்து மீள்வதற்கு சில நாட்களுக்கு முன்புதான் தாங்கமுடியாத துயரத்தில் தள்ளும் விதமான செய்தியை தம்பியொருவன் சொன்னான். இசைப்பிரியா கற்பழித்துக் கொல்லப்பட்ட காட்சிகளை சனல்-4 ஒளிபரப்பியிருக்கிறதாம் அண்ணா! நெஞ்சு நடுங்கவைக்கும் அந்தக் கொடூரத்தைப் பார்த்துவிட்டு லண்டன், கனடா, நோர்வே நாடுகளில் கடுமையான



கொந்தளிப்பாம். போர்க்குற்றவாளியாக ராஜபக்ஷவை அறிவிக்கக்கோரி உலக நாடுகள் பலவும் கண்டனம் எழுப்பியிருக்கின்றனவாம்! என்றான். அடுத்த சில நிமிடங்களிலேயே சமாதானப் பிரிவைச்சேர்ந்த ரமேஷ் கொல்லப்பட்ட காட்சிகளும் ஒளிபரப்பாவதாக எனக்குச் சொல்லப்பட்டது. மனதளவில் நான் சோர்ந்து சுறுண்டுபோனேன்.

அடுத்த இரண்டாவது நாளில் என் மீதான வழக்கு உடைக்கப்பட்டதாக தாங்கமுடியாத மகிழ்ச்சியுடன் தகவல் சொன்னார்கள். ஆனால் உண்மையில் எனக்கு எவ்வித மகிழ்ச்சியுமில்லை. வெளியேவரவே வெட்கமாக இருந்தது. இசைப்பிரியா சீரழிக்கப்பட்டார்... ரமேஷ் கொல்லப்பட்டார்... என்பதெல்லாம் பலருக்கும் ஒரு செய்தியாகவேயிருக்கும். ஆனால் எனக்கு அது என் வீட்டில் விழுந்த இழவுக்குச் சமம். என் மனக்கண்ணில் இசைப்பிரியா சிரிக்கிறாள்... ஈழத்தில் நான் இசைப்பிரியாவுடன் உரையாடிய நிகழ்வுகள் நெஞ்சுக்குள் வந்துபோகின்றன. இசைப்பிரியா... ஈழத்து உயிரோவியம் அவள் பேசுவதே கவிதை வாசிப்பது போல் இருக்கும். அழகுத் தமிழில் என்னை அவள் நேர்காணல் எடுத்த நிகழ்வு, ஏதோ இன்றைக்கு நடந்ததைப்போல் இருக்கிறது. புலிகளின் நிதர்சனம் தொலைக்காட்சிக்காக இசைப்பிரியா கேள்விகேட்க... நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அண்ணா கிபிர்வரும் சத்தம்... என என்னை அடுத்த இடத்துக்குத் தூக்கிக்கொண்டு போவார்கள். பின்னர், ஆசுவாச நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் பேட்டி தொடரும். நான்கைந்து நிமிடங்களுக்குமேல் ஓரிடத்தில் நின்று பேசமுடியாது. என்னேரமும் குண்டுவிழும் என்கிற அபாய சூழலிலும் புன்னகை மாறாத முகத்தோடு இசைப்பிரியா ஈழம் குறித்தும், தமிழகம் குறித்தும் நிறைய உரையாடினாள்.

ஈழப்போரின் இறுதிக் கட்ட நேரத்தில் யார் யாருக்கு என்ன நேர்ந்ததோ எனப் பதற்றத்தோடு நான் பட்டியலிட்டுப் பார்த்தவர்களில் இசைப்பிரியாவும் ஒருவர். போர் முடிந்த சில மாதங்களில் பிரபாகரன் மகள்

**3 சிறை மீண்ட சீமான் எழுதும் 'திருப்பி அடிப்பேன்' அதிரடி அனல் கனல் தொடர்...**

துவாரகா கொல்லப்பட்டதாக சில ஊடகங்கள் இசைப்பிரியாவின் புகைப்படத்தை வெளியிட்டன.

# கனடா கண்டிக்கிறது; லண்டன் வளைக்கிறது தமிழ்நாடு மட்டும் சலனமின்றிக் கிடக்கிறது!

கொல்லப்பட்டது இசைப்பிரியாதான்... துவாரகா இல்லை! என அடுத்த சில நாட்களிலேயே வெளியான உண்மை, தடதடத்த தமிழிதயங்களை தைரியம் கொள்ளவைத்தது. ஆனால் அன்றைக்கும் இந்தச் சீமான் இருந்தது அழுகையோடுதான்! சிறைவாசலில் திரண்ட கூட்டம்... ஆவேச முழக்கம்... ஆதரவுக்கரங்கள்... வழிநெடுக வரவேற்பு... இத்தனைக்கு மத்தியிலும் இசைப்பிரியாவின் துயரம் என் நெஞ்சைத் துளைத்துக்கொண்டேயிருந்தது. அதேபோல் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்ட ரமேஷின் மரணமும்! போராளிகளின் கட்டளைத் தளபதியாக இருந்த ரமேஷ் அங்கே பெரு மரியாதையோடு பார்க்கப்பட்டவர். கண்ணியில் சிக்கிய காடைக்குருவியாய் சிங்களப் பிடியில் சிக்கிய அவருடைய கோலத்தை இணையத்தளத்தில் கண்டு சுக்குநூறாகிப் போனேன். கொன்றார்களா... வெறிபிடித்துத் தின்றார்களா... என்றே தெரியாத அளவுக்கு சிதைக்கப்பட்ட இசைப்பிரியாவின் இறுதி நிமிடங்களை கண்டித்து எழுதக்கூட என் கைகள் நடுங்குகின்றன. ராஜபக்ஷவுக்கு எதிராக போர்க் குற்ற விசாரணையை நோர்வே நடத்தச் சொல்கிறது... கனடா கண்டிக்கிறது... லண்டன், ராஜபக்ஷவை வளைக்கிறது... சுவிட்சர்லாந்து கண்டனமும் போராட்டமுமாகப் கொந்தளிக்கிறது. ஆனால் என் தாய்த்தமிழ் உறவுகள் வாழும் தமிழ்நாடு மட்டும் எந்தச் சலனமுமில்லாமல் கிடக்கிறது. ஒரு குரலில்லை... ஒரு கூப்பாடு இல்லை... முதல் தமிழனாக அலறியிருக்கவேண்டிய எங்கள் தமிழினத் தலைவரோ இளைஞன் திரைப்பட விழாவில் நமீதாவின் வணக்கத்துக்கு நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார். தன் மகளாக எண்ணக்கூடிய தளிர்

ஒன்றை சிங்கள வல்லூறுகள் சிதைத்துப்போட்ட கோலத்தை எங்களின் தமிழினத் தலைவரிடம் எடுத்துச் சொல்லக்கூட இங்கே ஆளில்லை! அப்படியே சொல்லியிருந்தாலும் என்ன செய்துவிடப் போகிறார்...? எடுங்கப்பா ஒரு கடதாசியை... எனச் சொல்லி கடமைக்காக ஒரு கடிதம் எழுதியிருப்பார். ஈழமே இழவுக்காடாகி கிடந்த வேளையிலும் அரைநாள் உண்ணாவிரதம் இருந்து அசத்திய தமிழ் மகனிடம் எங்களுக்கான குரலை இன்னமும் எதிர்பார்த்துக் காத்திருப்பது தவறுதான். ஆனால் இனத்தை ஈனப்படுத்தும் வெறியாட்டங்களாவது பாசத் தலைவரின் மனதை கொஞ்சமேனும் பதறவைக்காதா? என்று ஒரு நப்பாசை! இருக்கட்டும் காலம் இப்படியே போய்விடாது. ஈழத்துக் கண்ணீரை இன்னமும் கண்டுகொள்ளாமல் இருக்கும் தமிழினத் தலைவனின் பாராமுகத்துக்குப் பதில் தேடும் காலம் நெருங்கிவிட்டதாகவே நினைக்கிறேன். இன்றைக்கு பத்திரிகைகளைப் புரட்டினாலே உங்களின் குடும்ப பராக்கிரமங்கள்தான் கொடிகட்டிப்பறக்கின்றன. மகனை மகள் திட்டுகிறார். மகளைப் பேரன் திட்டுகிறார். இருவரும் உங்களையே இயலாதவராக விமர்சிக்கிறார்கள். எல்லோருடைய உரையாடல் பதிவுகளும் வெளியாகி தமிழினத் தலைவராகிய உங்களைத் தத்தளிக்க வைக்கின்றன. அங்கே... இங்கே... என அத்தனை இடங்களிலும் சோதனை நடத்திய மத்திய புலனாய்வுத்துறை, அடுத்தபடியாக உங்களின் சி.ஐ.டி. காலனி வீட்டில் நுழைந்தாலும் ஆச்சரியம் இல்லை என்கிறார்கள். இத்தனை வயதில்



பதவிகள் நிலைக்குமா?... கூட்டணி நீடிக்குமா? என ஒவ்வொரு நிமிடமும் உறக்கமின்றித் தவிக்கிறீர்களாமே? உலகத் தமிழர்களின் கண்ணீர்தான் உங்களின் நிம்மதியை காவு வாங்கியிருக்கும் என்பது என் அழுத்தமான அனுமானம். இலவசத் தொலைக்காட்சி, ஒரு ரூபாயிற்கு அரிசி என மக்களைச் சோம்பேறிகளாக்கி அதை வைத்தே மீண்டும் ஆட்சிக்கு வந்திடலாம் என நம்பிக்கையோடு இருந்த நீங்கள்... இன்னும் சில இலவசத் திட்டங்களுக்கு புத்தியைத் தீட்டிக்கொண்டிருந்தீர்கள். ஆனால்



வெண்ணெய் திரண்ட நேரத்தில் தாழி உடைந்த கதையாக ஸ்பெக்ட்ரம் விவகாரம் இன்றைக்கு சந்தி சிரிக்கிறது. போரை வழிநடத்துவதே இந்திய இராணுவம்தான் எனச் சொல்லி காங்கிரஸை நாங்கள் கண்டிக்கச் சொன்னபோது, மந்திரிப் பதவிகளைத் தூக்கி வீசிவிட்டு நீங்கள் வந்திருக்கவேண்டும். நியாயமான மனிதராக- நெஞ்சுரம் கொண்ட தமிழராக இல்லாத நீங்கள், அன்றைக்கு அந்த அற்பப் பதவிகளை தூக்கிவீச அஞ்சினீர்களே... இன்றைக்கு காங்கிரஸின் நிர்ப்பந்தமே அதி முக்கிய பதவியாக- பணம் காய்க்கும் மரமாக நீங்கள் நினைத்த தகவல் தொடர்புத் துறையை தட்டிப்பறித்துவிட்டதே... அது ஈழத்துப் பாவத்தால் நிகழ்ந்திருக்காது என்பது என்ன நிச்சயம்? பதவியை இழந்ததற்கே இப்படிப் பதறுகிறீர்களே... உயிரை இழந்தவர்களின் வலி உங்களுக்கு ஏன் ஐயா புரியாமல் போய்விட்டது? இது ஆரம்பந்தான்... நீங்கள் எதற்காக ஈழத் துயரத்தை கண்டிக்காமல் கைகட்டி, வாய் பொத்தி, ஆமாம் சாமியாக இருந்தீர்களோ... அவை அத்தனையும் காங்கிரஸின் இக்கட்டுக்களால் உங்களின் கைகளை விட்டு போகும் பாருங்கள். கோபமாக இதனை நான் சொல்லவில்லை. உங்களின் பாராமுகத்தால் பலியான ஆயிரமாயிரம் உயிர்களின் சாபமாகச் சொல்கிறேன்!

இராஜதந்திரங்களின் தகப்பனாக- சாதுரியச் சிறுத்தையாக- அரசியல் நெளிவு சுழிவுகளை ஆகக் கற்றவராக வலம்வந்த நீங்கள் இன்றைக்கு ஸ்பெக்ட்ரம் சர்ச்சையில் நிலைகுலைந்தவராக- நிம்மதி இழந்தவராக- நெருக்கடி சூழ்ந்தவராக இருக்கிற நிலையைச் சுட்டிக்காட்டிச் சொல்கிறேன்... தமிழினத்தின் வீரத்தை உலகத்திற்கே பறைசாற்றி புலித்தலைவனாய் தீரம் காட்டிய பிரபாகரன் எங்கே... ஊழலில் எப்படிச் சாதனை படைப்பது என உலகையே திகைக்க வைத்து பழித்தலைவனாய் பட்டம் வாங்கியிருக்கும் நீங்கள் எங்கே...?!

ஞாயிறு தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] படிப்பகம்
[illegible] சபை, யாழ்ப்பாணம்.



# படையினர்-புலிகளின் தாக்குதல்களில் குழந்தைகள் உட்பட பலர் பலியாகினர்

## விக்கிலீக்ஸ் தகவல் வெளியீடு




(கொழும்பு)

அரசாங்கப் படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் பாதுகாப்பு வலய பகுதி மீது தாக்குதல் நடத்தியதாகவும் அதனால் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் உயிரிழந்தமை உண்மை எனவும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடமையாற்றிய மருத்துவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் தீர்க்கமான கால கட்டத்தில் அரசாங்கம் அறிவித்த பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இந்த மருத்துவர்கள் பணியாற்றி வந்தனர்.

பாதுகாப்பு வலயம் என்பதை கவனத்தில் கொள்ளாத அரசாங்கப் படைகளும், விடுதலைப் புலிகளும் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தியதாகவும், இதனால் பொதுமக்கள் பெரும் துயரங்களை அனுபவித்தனர் என மருத்துவர்கள் வெளிநாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் கைது செய்யப்பட்ட இந்த மருத்துவர்கள் சில காலம் பாதுகாப்புத் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த 2009ஆம் ஆண்டு யூலை மாதம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட இந்த மருத்துவர்கள் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் பொது மக்கள் மற்றும் சிறுவர்கள் கொல்லப்பட்டதாகவும் பொதுமக்கள் காயமடைந்தனர் எனவும் விடுதலைப் புலிகளின் அழுத்தங்கள் காரணமாகவே தாம் வெளிநாட்டு ஊடகங்களிடம் தெரிவித்ததாக கூறியிருந்தனர்.

இந்த நிலையில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி, விடுதலைப் புலிகளின் அழுத்தங்கள் காரணமாகவே தாம் அவ்வாறு கூறியதாக தெரிவிக்குமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதாகவும் ஊடகவியலாளர் சந்திப்பில் என்ன கூறப்படவேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரியப்படுத்தி இருந்ததாகவும் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் ,அழுத்தங்கள் காரணமாகவே தாம் முதலில் பாதுகாப்பு தரப்பினர் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தியமை பொய்யானது எனத் தாம் கூறியது பொய் என மருத்துவர்கள் தெரிவித்திருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது எனவும் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தின்போது பல முக்கியமான விடயங்கள் குறித்து கலந்துரையாடி பல தீர்மானங்கள் மேற்கொள்ளவுள்ளதால் புதிதாக இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் உட்பட சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் பிரதி அதிபர் கெங்காதேவி ஜெயராஜ் அறிவித்துள்ளார். (ச-7)

## கிளி.தண்...

யுத்த நடவடிக்கைகளின்போது ஏ-9 வீதியோரமாக கிளிநொச்சியில் அமைக்கப்பட்டிருந்த பிரதான குடிநீர்த் தாங்கி விடுதலைப் புலிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருந்தது.

இந்தக் குடிநீர்த் தாங்கியை அகற்றி மீண்டும் புதிய தாங்கி ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

யுத்தத்தின்போது மாறிமாறி குண்டு வைத்துத் தகர்த்த இரண்டாவது குடிநீர்த் தாங்கி இதுவாகும்.

மேற்படி குடிநீர்த் தாங்கியின் எச்சங்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்தவேளை திடீரென அந்த நடவடிக்கைகள் ரத்துச் செய்யப்பட்டு சுற்றுலா மையம் ஆக்கப்பட்டது. இந்நிலையில் இந்தச் சுற்றுலா மையத்தினை அமைச்சர் விமல் வீரவன்ச திறந்து வைத்தார்.

அங்கு வந்திருந்த நூற்றுக்கணக்கான சிங்களப் பொதுமக்களுக்கு இதுபற்றி விளக்கமளித்த விமல் வீரவன்ச விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இந்தத் தண்ணீர்த் தாங்கியில் இருந்து கொண்டுதான் யுத்தத்தை வழிநடத்தியதாகக் குறிப்பிட்டார். (ச-5)

## இலங்கைத் தமிழர் பிரச்சினை...

இலங்கைத் தமிழ் மக்களின் நலன்கருதி அவர்களின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானித்து வருவதாக இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்த ராகுல் காந்தி அங்கு செய்தியாளர்களை சந்தித்தபோதே இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

தமிழினம் படும் துன்பங்கள் துயரங்கள் தொடர்பில் நான் மிகுந்த கரிசனையோடு செயலாற்றி வருகின்றேன். நிச்சயமாக ஈழத் தமிழரின் விடிவிற்காக அவர்களின் அரசியல் பிரச்சினைக்கான முடிவுகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களின் சுமுகமான செழிப்பான வாழ்க்கையை ஏற்படுத்த தொடர்ந்து செயற்படுவேன்.

இதேவேளை ஈழத்தமிழரின் அரசியல் பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசிடம் தெளிவுபடுத்துவதற்காக நேரடியாக தலையிடவுள்ளேன்.

இலங்கை அரசினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துன்ப துயரங்கள் மிகவும் கவலை அளிக்கின்றன. இதற்காக இலங்கை அரசு மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்கவுள்ளேன் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்க இலங்கை அரசாங்கத்தினால் போதுமான அளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைப்பதை தான் உறுதிப்படுத்துவேன் எனவும் சென்னையில் நடைபெற்ற புத்திஜீவிகளுடனான சந்திப்பொன்றில் பேசுகையில் ராகுல் காந்தி தெரிவித்தார்.

இவ்விடயத்தை இந்திய மத்திய அரசாங்கத்தில் உள்ள பொருத்தமான நபர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் அவர் கூறினார்.

புத்திஜீவிகள் அரசியலுக்கு வரத் தயங்குவது குறித்து விசனம் தெரிவித்த ராகுல்காந்தி, தேசிய அரசியலுக்கு புத்திஜீவிகள் தமது பங்களிப்பை வழங்கவேண்டும் என்றார்.

அதிக இளைஞர்களை களமிறக்குவதன் மூலம் இந்தியாவின் தேசிய அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த தான் முயற்சிப்பதாகவும் ராகுல் காந்தி மேலும் கூறினார். (ச-5,7)

## நாடு முழுவதும் எதிர்...

உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அனுமதிச்சீட்டை வாங்கிக்கொண்டு கோட்டைப் புகையிரத நிலையத்தினுள் சென்ற ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐ.தே.கவின் உறுப்பினர்கள் பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து அங்கு கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. அதில் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

சகல துறையினருக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். வாழ்க்கைச் செலவானது தாங்க முடியாத அளவு சுமையாக உள்ளது.

சகலருக்கும் சம்பள உயர்வு கிடைக்கும் வரை போராடுவோம். அரசாங்கம் சம்பள உயர்வை தானாகத் தராத பட்சத்தில் அதனை நாம் வழங்க வைப்போம்.

இவ் ஆர்ப்பாட்டங்களுக்கு மக்களை அணி திரட்டவும் அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளவும் நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, அரசாங்கம் விரயங்களைக் குறைத்து பண்டிகை காலத்தில் மக்களுக்கு போனஸ் வழங்க வேண்டும் என்றார். (ச-5)

## முன்னாள்...

வைத்த புலிச் செயற்படுநர்கள் என்று தெரிய வந்தது.

இவர்கள் பின்னர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பாதுகாப்பு செயலாளரின் கட்டளையின் பிரகாரம் அவர்களைத் தடுத்து வைத்து விசாரித்த பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபர்களுக்கான தடுப்புக் காலம் முடிந்த பின் கொழும்பு மேலதிக நீதிவான் முன் நேற்று ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்கள் மீதான விசாரணைகள் முடியாத படியால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்திருக்க நீதிமன்றம் அனுமதித்தது. (ச-5)

MyWay English ஆங்கில பயிற்சி
ஆரம்பம் : 26.12.2010 சனி, ஞாயிறு 3 மாதம்
ஒருசில இடங்களுக்கே அனுமதி உண்டு
இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடியும்
MyWay 077 33 63 456
182, Stanley Rd, Jaffna

## வெள்ளத்தால் பாதிக்...

கப்பட்டுள்ள மக்களுக்கான உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றப்பட்ட மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியை அறிந்ததும் ஜனாதிபதி மீள்குடியேற்ற அமைச்சர் என்ற வகையில் என்னை அழைத்து அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க எனக்கு உத்தரவிட்டார்.

அவரின் பணிப்புக்கு அமையவே இத்தகைய நிவாரணம் வழங்கப்படுகிறது.

நாலரைக் கோடி ரூபாய் செலவில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் வெள்ள நிவாரணம் வழங்கி வருகின்றோம்.

30 வருடமாக நடைபெற்ற யுத்தம் பல அழிவுகளை தேடித்தந்துள்ளது. அந்தக் கசப்பான உணர்வுகளை மறந்து அனைவரும் அபிவிருத்திப் பணிக்கு ஒத்துழைக்க வேண்டும்.

வட பகுதியில் மட்டுமல்ல; தென் பகுதியிலும் அழிவுகள் ஏற்பட்டுள்ளது. இவை பற்றி சிந்திப்பதால் நடக்கப்போவது எதுவுமில்லை.

எனவே பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மேலும் பாதிக்கப்படாமல் இருக்க வழி செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

நியூ சிற்றி றேடேர்ஸ் மலிவு விற்பனை
31.12.2010வரை
சொனி, பனசொனிக் 14",21",25" கலர் ரிவி, டிஸ் ரிவி, ரிசீவர், DVD பிளேயர், அம்பிளிபயர், பவல்ஸ், வூபர்ஸ், கசற்றெக்கோடர், றேடியோ, சுவர், மேசை, கை மணிக்கூடுகள், றைஸ் குக்கர், காஸ் குக்கர், பிறசர் குக்கர், மண்ணெண்ணெய் குக்கர், கிரைண்டர், அயன், கொட்பிளேட், எலெக்ரிக் கேத்தல், சார்ச்லைற், சார்ச்சரோச், சப்பிளைசர்கள் மற்றும் எலக்ரிக்கல், எலக்ரோனிக் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருட்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.
நியூ சிற்றி றேடேர்ஸ்
319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P.:- 0212223226
(881)

வட பிராந்தியத்திற்கான DHL சேவையினை
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
விசேட விலைக் கழிவுடன் கொண்டாடுங்கள்
ஆகாய கடல்வழி மார்க்கமாக 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை
கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள்
உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD
மற்றும் சகல விதமான பொருட்களையும்
மிக விரைவாக அனுப்பிடலாம்
DHL WORLDWIDE EXPRESS
TCN Express
No-2B, Nelson Place, Colombo-6
திருமுருகன் கொம் வெற்
இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
இல-46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
பிரதான வீதி, நெல்லியடி.

அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு
சுந்தர்சன் நிறுவனத்தின் மாபெரும் மலிவு விற்பனை யில் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நாளை (24.12. 2010) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு சுந்தர்சன் நிறுவனத்தில் நடைபெறும்.
சுந்தர்சன்
மானிப்பாய்
(சி-1880)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org